

# கொங்குநாடும் கம்பரும்

செ.இராச

# கொங்குநாடும் கம்பரும்

ஆசிரியர்

புலவர் **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,

முன்னாள் தலைவர்

கல்வெட்டு தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு

**கொங்கு ஆய்வு மையம்**

ஈரோடு - 638 011.

# நூற்குறிப்பு

விசயமங்கலம் 'சௌத் இந்தியா' திரு. துரைசாமி - திருமதி. இராஜலட்சுமி துரைசாமி ஆகியோர் பொருட்கொடையால் இந்நூல் வெளியிடப் படுகிறது. அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி !

| | |
|---|---|
| நூல் பெயர் | **கொங்குநாடும் கம்பரும்** |
| நூல் பொருள் | இலக்கிய வரலாறு |
| ஆசிரியர் | புலவர் **செ. இராசு** |
| மொழி | தமிழ் |
| நூல் உரிமை | ஆசிரியர்க்கு |
| நூலின் அளவு | 14 செ.மீ. X 21 செ.மீ. (டெம்மி) |
| முதல் பதிப்பு | 2015 |
| பக்கங்கள் | 104 |
| அச்சு எழுத்து | 11 புள்ளி |
| விலை ரூபாய் | 70/- |
| நூல் கிடைக்குமிடம் : | கொங்கு ஆய்வு மையம்<br>'புலவர் பூங்குடில்'<br>58/2, பாலக்காட்டுத் தோட்டம்<br>புதிய ஆசிரியர் குடியிருப்பு வழி<br>ஈரோடு - 638 011.<br>போன் : 0424 - 2262664<br>செல் : 95009 38384, 97900 38380 |
| நூல் & அட்டை வடிவமைப்பு | வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்<br>29 நாச்சியப்பா வீதி II<br>ஈரோடு - 638 001.<br>போன் : 0424-2258511, 2258522 |

# கம்பர் புகழ் பேசிய கொங்கு மாமணிகள்

'கோவைக் கம்பர்'



**பி.ஜி. கருத்திருமன்**
(29.9.1919 - 5.8.1977)

'கம்பன் செஞ்சொற் கொண்டல்'



**க.கு. கோதண்டராமன்**
(6.12.1921 - 1.8.1992)

## ஆகியோர்களுக்குக் காணிக்கை

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| | அணிந்துரை | 6 |
| | முன்னுரை | 8 |
| 1. | தமிழகம் அறிந்த இராமகதை | 11 |
| 2. | கம்பர் | 14 |
| 3. | கற்றோர் போற்றும் கம்பர் | 17 |
| 4. | கம்பர் பெயர்க்காரணம் | 20 |
| 5. | கம்பர் காலம் | 23 |
| 6. | கொங்கு நாட்டில் கம்பர் | 27 |
| 7. | குலப்பிரிவுகள் பாடிய கம்பர் | 30 |
| 8. | கம்பர் பெற்ற திருமண வரி | 32 |
| 9. | கம்பரைப் போற்றிய கொங்கர் | 36 |
| 10. | கம்பர் புகழ்மொழிகள் | 46 |
| 11. | கொங்குப் பாடல்களில் கம்பர் | 47 |
| 12. | கம்பர் நினைவைப் போற்றும் கொங்கர் | 51 |
| 13. | வேளாளரின் முடிசூட்டும் உரிமை | 54 |
| 14. | கம்பர் பாடலா? | 57 |
| 15. | மீண்டும் சோழ நாட்டில் கம்பர் | 63 |
| 16. | சடையப்ப வள்ளல் | 66 |
| 17. | சார்பு நூலும் எதிர் நூலும் | 76 |
| | பிற்சேர்க்கை | |
| 1. | கம்பராமாயணப் பதிப்புக்கள் | 89 |
| 2. | தொடர்புடைய இலக்கியச் சுவடிகள் | 98 |
| 3. | ஏக விருத்த ராமாயணம் | 100 |
| 4. | கடல் கடந்த கம்பர் | 101 |

# அணிந்துரை

பெரும்புலவர், முனைவர் செ. இராசு அவர்கள் கல்வெட்டு, தொல்லியல் துறைகளில் நிகழ்த்தியுள்ள சாதனைகள் வியக்கத் தக்கவை; விழுப்பயன் அளிக்கக்கூடியவை. ஓர் அரசோ, நிறுவனமோ செய்ய வேண்டிய பணிகளைத் தனிமனிதராக அரும்பாடுபட்டு ஆற்றியுள்ளார். இவருடைய அயராத உழைப்பையும், ஆக்கப் பணிகளையும் அறிந்த தமிழக அரசு 2012 ஆம் ஆண்டிற்குரிய உ.வே.சா. விருதினை அளித்துப் பாராட்டியது. இன்றும், கோயில் வரலாறு, குலவரலாறு என்று எழுதிக் குவித்துக்கொண்டிருக்கின்றார்.

''கொங்கு நாடும் கம்பரும்'' என்னும் இந்நூல் கல்வெட்டு, செப்பேடுகள், தனிப்பாடல்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் எழுதப்பட்டது. கொங்கு மண்டல சதகம், சோழ மண்டல சதகம் ஆகிய நூல்களின் அடிப்படையில் ஆய்ந்து முடிவுக்கு வரும்போது கருத்து வேறுபாடுகள் எழுவது இயல்பு.

'கம்பர்' எனும் இயற்பெயர் பல கல்வெட்டுக்களில் காணப் படுவதால் அது இயற்பெயரே என்று குறிப்பிடுகின்றார். கம்பர் எனும் பெயர் பலருக்கு இருந்திருக்கிறது. இது காரணப்பெயர் அன்று. இயற்பெயரே என்று கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கின்றது. கொங்கு நாட்டில் வாழ்ந்த கம்பர் பிற்காலத்தவர். கம்ப இராமாயணம் எழுதிய கம்பர், ஆசிரியர் கருத்துப்படி 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். கருத்தியல் வகையிலும், கவித்துவச்சிறப்பு நிலையிலும் இருவரும் ஒருவரே என்பது பல முரண்பாடுகள் முகிழ்க்கக் காரணம் ஆகிவிடும்.

கொங்கு நாடு கலை இலக்கியத் துறையில் சற்றுப் பின்தங்கிய நாடு எனும் கருத்து நிலவுகிறது. ஆனால் பிற்காலக் கம்பருக்கு கொங்கு நாடு கொடுத்த மதிப்பும் மரியாதையும் அளப்பரியன என்பதை இந்நூலாசிரியர் பல்வேறு சான்றுகளுடன் நிறுவியுள்ளார். சோழ நாட்டை விடக் கொங்குநாடு சிறந்தது என்று இந்தக் கம்பர் பல்வேறு பாடல்களில் தெரியப்படுத்துகின்றார். காவிரி கொங்கு

நாட்டாரின் எச்சில் என்கிறார். சோழன் என் நேரிமலையைப் பாடுங்கள் என்ற போது, கம்பர், உங்கள் நேரிமலை கொங்கு மக்கள் வைக்கோல் போர்ப்பட்டறைக்கு வைக்கும் கல்லுக்குச் சமம் அல்ல என்று கூறினாராம். சோழன் தன் செங்கோலைப் பாடுமாறு கேட்க, உங்கள் செங்கோல் கொங்கு மக்கள் உழும் கலப்பையின் கைப்பிடிக்குச் சமம் அல்ல என்று கூறினாராம். கம்பர் கொங்கு நாட்டின் மேல் வைத்திருந்த பற்றும், கொங்கு நாட்டு மக்கள் கம்பர் மீது கொண்டிருந்த எல்லையற்ற மரியாதையும் எண்ணி எண்ணி மகிழத்தக்கவை.

கொங்கு நாட்டைப் பற்றிக் கம்பர் இழிவாகப் பாடிய பாடல் கம்பர் பாடியது அல்ல என்பதைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார் புலவர் செ. இராசு. கம்பராமாயணத்தில் இடைச் செருகல்கள் மிகுதியாக உள்ளது போல, பிற்காலக் கம்பர் பாடல்களிலும் இடைச்செருகல் மிகுதி. நிகழ்ச்சிகள் பல கற்பனையாக இருந்தாலும் சுவை மிக்கன; பயன்தருவன.

கம்பராமாயணம் இயற்றிய கம்பருக்கு சடையப்ப வள்ளல் ஆதரவு தந்தது போல பிற்காலக் கம்பருக்கு இந்த நூலின் ஆசிரியர் பேராதரவு தந்துள்ளார். பொன்னாலும் பொருளாலும் அன்று ஆய்வுத்திறத்தாலும், புலமைப் பெருக்காலும் இந்தக் கம்பரின் திறமைகளுக்கு வெளிச்சம் தந்துள்ளார். அதே நேரத்தில், கொங்கு நாட்டு மக்களின் இலக்கிய ஈடுபாட்டையும், புலவர்களுக்குப் புரவலர்களாக விளங்கிய சிறப்பையும் மிகச்சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

சுருங்கக்கூறின் கொங்குத் தாயின் மணி மகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லைப் பதித்துள்ளார் புலவர் இராசு. மனமாரப் பாராட்டி மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

285, தொலைபேசி நகர்,
குள்ளம்பாளையம் (அஞ்சல்)
கோபி - 638 476.
கைபேசி : 94866 40976

அன்புடன்,
முனைவர் **செ.சு. பழனிசாமி**
தலைவர்,
கோபி, நல்லமுத்து கம்பன் அறநிலைக்குழு

# ஆசிரியர் முன்னுரை

கொங்கு நாட்டுக் கல்வெட்டு, செப்பேடு, ஓலைப்பட்டயம் போன்ற வரலாற்று ஆவணங்களையும், தனிப்பாடல், இலக்கியம் ஆகியவைகளையும் தொகுத்து ஆய்வு செய்யும்போது ஒரு ஆச்சரியமான செய்தி தெரிந்தது. தமிழ், தமிழ்ப் புலவர், தமிழ் இலக்கியம் மீது கொங்கு மக்கள் கொண்டிருந்த உயரிய பெருமதிப்பு வெளிப்பட்டது.

கொங்கு மக்கள் பலர் தங்கள் குலப்பெயர், இயற்பெயர், பட்டப் பெயர்களோடு தமிழதரையன், தமிழ்நம்பி, தமிழவாணன், தமிழ வேளான் போன்ற சிறப்புப் பெயர்களையும் இணைத்துக் கொண்டிருந்தனர்.

''சிற்றில்லோட்டிலிருக்கும் வெள்ளாளன் காடைகளில் ஆடன்
புளியனான உத்தமசோழத் தமிழவேளான்''

என்பது காங்கயம் வட்டம் வள்ளியறச்சல் மாந்தீசுவரர் கோயில் கல்வெட்டு.

கொங்கு மக்கள் பலருக்கும் காணிப்புலவர்கள் இருந்தனர். அவர்களை முன்னிலைப்படுத்தியே குடும்பம் கோயில் சமூக நிகழ்வை நடத்துவர். திருமண வீடுகளில் நடைபெறும் சடங்குகளில் கடைசிச் சடங்கு 'புலவர் பால்பழம் சாப்பிடுதல்' என்ற நிகழ்வு ஆகும். இதை வேளாளர் கீர்த்திப் பாடல்,

''தங்களுட கீர்த்தியைக் கொண்டாட அஞ்சுபடி
தன்புலமை யாகவைத்து
தான்உண் கலத்தில்பால் பழம்சர்க் கரையுடன்
தகும்தேன் உதவியே''

என்று கூறுகிறது. இலையில் இல்லாமல் திருமண வீட்டார் தாங்கள் உண்ணும் உண்கலத்தில் புலவரை உண்ணச் செய்வார்களாம். திருமண வீடுகளில் முகூர்த்தத்திற்குப் பின் கம்பர் வாழி 16, ஏரெழுபது, திருக்கை வழக்கம் எனக் கம்பர் இயற்றியதாகக் கருதப்பெறும் நூல்களைப் புலவர் படிக்க எல்லோரும் கேட்பார்களாம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த கொங்குப் பெருமக்கள் மிகப்பெரும் புலவராகிய கம்பர் கொங்கு நாட்டுக்கு வந்தால் வாளாவிருப்பார்களா?

உலகில் எந்த நாட்டினரும் எந்த மொழியினரும் தங்கள் புலவருக்கு அளித்திராத பெரும் மதிப்பைக் கொங்கு மக்கள் கம்பருக்குச் செய்தனர். உலகில் எந்தக் கவிஞரும் தம்மை ஆதரித்தவர்கட்குச் செய்திராத சிறப்பையும் நன்றிக் கடனையும் கம்பர் செய்தார்.

இந்த அரிய செய்தியைத் தமிழ் கூறும் நல்லுலகம் அறிவதற்காக எழுதப்பட்டதே இச்சிறு நூல். 2000 ஆண்டுகட்கு முன்பே இராமாயணச் செய்திகளைத் தமிழ்மக்கள் அறிந்திருந்த செய்தியும், கம்பர் பெயர்க்காரணம், காலம் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. சடையப்பர் பற்றிய சிற்சில செய்திகளும் உள்ளன.

கம்பராமாயணத்தை உள்வாங்கிக் கொங்கர் செய்வித்த சார்பு நூலாகிய தக்கைராமாயணம், எதிர் நூலாகத் தோன்றிய இராவண காவியச் செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

இச்சிறு நூலை எழுதுவதற்கு ஊக்கப்படுத்தியதுடன் சிறந்த அணிந்துரையும் அளித்துச் சிறப்பித்த பேராசிரியர் செ.சு. பழனிசாமி அவர்கட்கு மனமார்ந்த நன்றி.

தங்கள் கம்பர் விழாவில் இந்நூலை வெளியிட அனுமதி அளித்த கோபி, நல்லமுத்து கம்பன் அறநிலைக்குழுவினர்க்கு நன்றி உரியதாகுக.

இந்நூலை வெளியிடப் பொருள் உதவி செய்த நூல் ஆர்வலர் நண்பர் விசயமங்கலம் 'சௌத் இந்தியா' திரு. துரைசாமி - திருமதி. ராஜலட்சுமி துரைசாமி ஆகியோருக்கு நெஞ்சார்ந்த நன்றி உரியதாகுக.

கொங்கு மக்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் இந்நூலை வரவேற்பார்கள் என எண்ணுகிறேன்.

ஈரோடு<br>15.7.2015

அன்புள்ள,<br>செ. இராசு

# 1. தமிழகம் அறிந்த இராமகதை

கம்பர் இராமாயணம் பாடுவதற்கு நெடுங்காலம் முன்னரே, சங்க காலத்திலிருந்தே இராம கதையைத் தமிழக மக்கள் நன்கு அறிந்திருந்தனர்.

**சங்க இலக்கியம்**

அகநானூற்றில் இராமன் தென்கோடிக் கரையில் இலங்கைப் படையெடுப்புக் குறித்து ஆராய்ந்த செய்தி குறிப்பிடப்படுகிறது.

'வென்வேற் கவுரியர் தொல்முது கோடி
முழங்கு இரும்பெளவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக்கு அவித்த
பல்வீழ் ஆலம்' (அகம் 70)

என்பது அப்பாடற்பகுதி.

இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதை தன் அணிகலன் களைக் களைந்து துணியில் பொதிந்து கீழே வீசிச் சென்றதையும், அவற்றை எடுத்த கிட்கிந்தை வானரங்கள் அவற்றை அணியும் முறை தெரியாமல் அணிந்து நகைப்பை ஏற்படுத்தியதையும் புறநானூற்றுப் பாடல் ஒன்று விளக்குகிறது.

'கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதர்அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாங்கு
அறாஅ அருநகை இனிதுபெற் றிகுமே'' (புறம் 378)

என்பது புறநானூற்றுப் பாடல்.

**சிலப்பதிகாரம்**

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் இராமாயணச் செய்தி கூறப்படுவதுடன் இராமன் திருமால் அவதாரம் என்றும் கூறப்படுகிறது.

'மூவுலகும் ஈரடியால் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே?

என்பது சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைப் பாடல்.

**ஆழ்வார் பாசுரங்களில்**

குலசேகர ஆழ்வார் இராமனுக்குத் தாலாட்டுப் பாடுகிறார். இராமனைப் பிரிந்து தசரதன் வருந்தியதைப் பாடுகிறார். சீதா பிராட்டியிடம் அனுமன் உரைத்த அடையாள மொழிகளில் சிலவற்றைப் பெரியாழ்வார் பாசுரத்தில் குறிக்கின்றார்.

இராவணனைப் போரில் இராமன் வென்றது குறித்து அஞ்சிய அரக்கர்கள் இராமனிடம் அபயம் வேண்டிக் கூத்தாடிப் பாடுவதாகத் திருமங்கையாழ்வார் பாடுகிறார். குகன் இராமனிடம் கொண்ட பக்திக் காதலைச் சிறந்த நாடகக் காட்சியாகவே இவர் பாடுகிறார்.

**உரை நூல்களில்**

தொல்காப்பியம், யாப்பருங்கலம், வீரசோழியம் உரைகளில் காட்டப்பட்டுள்ள மேற்கோள் பாடல்களின் மூலம் கம்பருக்கு முன்பே வெண்பா வடிவிலும், ஆசிரியப்பா வடிவிலும் இராமசரித்திரம் பாடப் பட்டுள்ளதை அறிகிறோம்.

வீரசோழியம் பழைய உரையில் (பொருள் 18) ஒற்றன் ஒருவன் பகைவர் சேனை வரவை இராவணனிடம் கூறியதாக அமையும் ஒரு வெண்பா இடம் பெற்றுள்ளது.

'ஐயிருபது ஓசனையும் ஆங்கோர் இடம்இன்றிக்
கைபரந்த சேனைக் கடலொலிப்பத் - தையல்
வழிவந்து இராமன் வடகரையான் என்றான்
விழிவந்து வேறாக மீட்டு,

என்பது அப்பாடலாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் (67) நச்சினார்க்கினியர் உரையில் இராமன் நடத்திய போரில் இலங்கை முற்றுகை குறித்த ஒரு பாடல் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

'இருசுடர் இயங்காப் பெருமூது இலங்கை
நெடுந்தோள் இராமன் நடந்த ஞான்றை
எண்கிடை மிடைந்த பைங்கட் சேனையிற்
பச்சை போர்த்த பல்புறத் தண்ணடை
எச்சார் மருங்கினும் எயிற்புறத்து இறுத்தலில்
கடல்சூழ் அரணம் போன்றது
அடல்சின வேந்தன் முற்றிய ஊரே,

என்பது அப்பாடல்.

## மேற்கோளாக இராமகதை

அறிவுரை கூறும்போதோ பிற சமயங்களிலோ எடுத்துக்காட்டாக இராமாயண நிகழ்வைச் சுட்டிக் காட்டுவது தமிழ்மக்கள் பண்டைய வழக்கம். துன்பம் வந்துற்றபோது எவரும் எச்செயலையும் செய்வர் என்பதற்கு ''சீதா பிராட்டியாரின் மெல்லிய திருவடிகள் காட்டுவழி நடக்கவும், இராமன் திருக்கரங்கள் காட்டில் பன்னக சாலை கட்டவும் வல்லமையுடையதாயின'' என்பதை எடுத்துக்கூறும் இரண்டு பாடல்கள் கிடைத்துள்ளன.

''எய்த இன்னல் வந்தபோது யாவ ரேனும் யாவையும்
செய்ய வல்லர் என்பதுஓர்க செல்நெ றிக்கண் ஏகிட
மைய கண்ணி செய்யபாதம் வல்ல வாய; மற்றிவண்
கைகள் இன்று பன்னசாலை கட்ட வல்ல வாயவே''

''மேவு கானம் மீதில்ஐயர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவில் எம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதும் இவர்க்கியை யாதவே''

இவையெல்லாம் கம்பர் காப்பியம் பாட அடியுரமாக அமைந்தன எனலாம்.

# 2. கம்பர்

## கவிச்சக்கரவர்த்தி கம்பர்

அக்காலத்தில் ஒவ்வொரு துறையில் சிறந்தவர்கட்குச் ‘சக்கரவர்த்தி’ என்று பட்டமளித்துப் பாராட்டுவது வழக்கம்.

முட்டத்து வாணிகச் சக்கரவர்த்தி
பேரூர் சைவபுரந்தரச் சக்கரவர்த்தி
மாந்தை விசுவச் சக்கரவர்த்தி

என்பன சில பெயர்கள். அவ்வகையில் கம்பரும் கவிச்சக்கரவர்த்தி எனப்பட்டார்.

கம்பர் இயற்றிய இராமாயணம் அவர் பெயருடன் கம்ப ராமாயணம் என்று அழைக்கப்படுகிறது. உலகக் காப்பிய வரிசையில் முதலிடம் வகிப்பது கம்பராமாயணம். தமிழில் அதிக ஏட்டுச் சுவடிகள் உள்ள இலக்கியம் கம்பராமாயணம். அதிகப் பாட வேறுபாடுகளைக் கொண்டிருப்பதும் கம்பராமாயணமே. இது மக்களின் காப்பியம் என்பதைக் காட்டுகிறது.

ஆதி காவியமாகிய வால்மீகி ராமாயணத்தின் வழி நூலாக இருப்பினும் தமிழகப் பண்பாட்டிற்கு ஏற்ப முதல் நூல் நிகழ்ச்சிகளை ஏற்றவாறு தொகுத்தும் விரித்தும் மாற்றியும் நீக்கியும் வேண்டிய இடங்களில் புதுமையாகப் படைத்தும் கம்பர் தம் ஒப்பற்ற காப்பியத்தைப் படைத்துள்ளார். வெறும் கதையாகப் பாடாமல் நன்மைக்கும் தீமைக்கும் நடக்கும் போராட்டமாகவே காப்பியம் திகழ்கிறது.

பறவை, விலங்கு, அரக்கர் ஆகியோரை உறவாகப் பாவித்து ஆன்மநேய ஒருமைப்பாட்டை கம்பராமாயணம் விளக்குகிறது.

''வையம் மன்னுயிராக அவ்வையம் உய்யத்தாங்கும்
உடலன்ன மன்னன்''

''செயிரிலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்''

என மக்களாட்சி மாண்பைக் கம்பர் காட்டுகிறார்.

''எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ

எனப் பொதுமை அறத்துக்கு வழிகாட்டுகிறார்.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பெருங்கவிஞர் கம்பர் சோழநாட்டுத் தேரழுந்தூரில் பிறந்தார். அழுந்தூர் என்பதுதான் அவ்வூரின் பழம்பெயர்.

''கம்பன் பிறந்தஊர் காவேரி தங்கும்ஊர்
கும்பமுனி சாபம் தொலைத்தவூர் - செம்பதுமத்
தாதகத்து நான்முகனும் தாதையும்தே டிக்காணா
ஓதகத்தார் வாழும்அழுந் தூர்''

என்ற பாடல் அதை விளக்குகிறது. திருஞான சம்பந்தர் பாடல் பெற்ற தலம் ஆகையால் அழுந்தூர் திரு அடைமொழி பெற்றுத் திருவழுந்தூர் ஆயிற்று. பின் தேரழுந்தூர் எனப்பட்டது. நாட்டு வரைபடம் தேரெழுந்தூர் என்கிறது.

பழைய சோழ மண்டலப் பிரிவில் உய்யக்கொண்டார் வள நாட்டில் திருவழுந்தூர் நாட்டில் அவ்வூர் உள்ளது. பின் இராசநாராயண வளநாடு எனப்பட்டது. இப்போதைய நாகப்பட்டின மாவட்டத்தில் குத்தாலம் இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கில் 5 கிலோ மீட்டர் தூரத்தில் தேரழுந்தூர் உள்ளது.

கம்பரின் தந்தை பெயர் ஆதித்தன் என்று கூறப்படுகிறது. தேரழுந்தூர்க்கு முன் இவர்கள் மூவலூர் என்ற ஊரில் வாழ்ந்துள்ளனர் என்று தெரிகிறது. ''ஆதித்தன் கம்பன்' 'ஆதித்தன் புதல்வன் கம்பன்'

'மூவலூர் சீறார் குணாதித்தன் சேய் கம்பன்' 'ஆதவன் புதல்வன்' என்ற தொடர்கள் பாடலில் காணப்படுகின்றன.

கம்பருக்கு அம்பிகாபதி என்ற மகனும், காவிரி என்ற மகளும் இருந்துள்ளனர். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். கம்பர் பற்றிய பற்பல வாய்மொழிக் கதைகட்கு ஆதரவாகப் பல பாடல்கள் இருப்பினும் அவை நம்பத்தகுந்தவை அல்ல.

கொங்குப் புலவர் பட்டயத்தில்,

'எங்களுக்குப் புலமை முன் உகச்சர் வம்முசத்தில் கம்பருக்குக் கையேட்டுக்காரர் பன்னிரண்டு பேருள்ளவர்கள் மூலம்'

என வருவதாலும்,

வாணியர்தாதன் கம்பரைக்
'கைம்மணிச்சீர் அன்றிப் பிறசீர் அறியார்'

என்று கூறியதாலும்,

'ஓச்சன்' எனப்பாடலில் வருவதாலும் இவர் கோயில் பூசை செய்யும் உவச்சர் மரபினர் என்று தெரிகிறது.

# 3. கற்றோர் போற்றும் கம்பர்

'இம்பர் நாட்டில் செல்வமெல்லாம்
எய்தி அரசாண்டு இருந்தாலும்
உம்பர் நாட்டின் கற்பகக்கா
ஓங்கு நீழல் இருந்தாலும்
செம்பொன் மேரு அனையபுயத்
திறல்சேர் இராமன் திருக்கதையில்
கம்ப நாடன் கவிதையைப்போல்
கற்றோர்க்கு இதயம் களியாதே''

'இந்த உலகிலுள்ள எல்லாச் செல்வங்களையும் பெற்று அரசாளும் உரிமையுடன் வீற்றிருக்கும்போது ஏற்படுகின்ற இன்பமும், மேல் உலகத்தில் தன் நிழலில் நிற்பவர் பெற நினைத்தவற்றை யெல்லாம் உடனே தருகின்ற கற்பக மரத்தின் நிழலில் நின்றிருக்கும் போது தோன்றும் இன்பமும் கம்பன் கவிதையைக் கற்கும்போது அடையும் இன்பத்திற்கு இணையாகாது'' என்பது இதன் பொருள்.

'ஆங்கிலேயர்களின் முன்னால் இங்கிலாந்து நாட்டின் செல்வம் அனைத்தையும் வைத்து, மறுபக்கம் ஷேக்ஸ்பியர் படைப்புக்களை வைத்து இந்த இரண்டில் எதை விரும்புகின்றீர்கள் என்று கேட்டால் அவர்கள் ஷேக்ஸ்பியர் படைப்புக்களையே விரும்புவார்களாம்' என்ற மேனாட்டுச் செய்தி நினைவுக்கு வருகிறது.

கலைமகளைப் புலவர்கள் தாய் என்றும், தெய்வம் என்றும் போற்றுவர். ஆனால் கம்பர் மறைந்த நாளில் ஒரு புலவர் பாடிய பாடல் கலைமகள் கம்பருக்கு மனைவி என்றும், கணவராகிய கம்பர் இறந்ததால் கலைமகள் தனது மங்கல நாணை இழந்தாள் என்றும் கூறுகிறது.

'இன்றோநம் கம்பர் இறந்தநாள் இப்புவியில்
இன்றோநம் புன்கவிகட்கு ஏற்றநாள் – இன்றோதான்
பூமடந்தை வாழ புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்இழந்த நாள்'

என்பதாகும்.

இப்பாடலைப் படிக்கும் போது ஐரோப்பியர் ஹோமர் பற்றிக் கூறும் ஒரு புகழ்மொழி நினைவுக்கு வரும்.

'நெடுநாள் மகப்பேறு இன்றி வருந்திய இயற்கை
அன்னை ஹோமரை ஈன்றெடுத்தபின் மகப்பேறு
அற்றுவிட்டாள்'

என்பது அப்புகழ்மொழியாகும்.

தமிழச்சாதி அமரத்தன்மை வாய்ந்தது என்று எண்ணிய பாரதியார் தான் அவ்வாறு இறும்பூது எய்துவதற்கு உரிய காரணங் களைப் பின்வருமாறு கூறுகிறார்.

'சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறள் உறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
எல்லையொன்று இன்மை எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்த தென்று
உறுதிகொண்டு இருந்தேன்'

என்பது பாரதி வாக்கு.

பாரதியார் கம்பரை மற்ற பல இடங்களில் எவ்வாறெல்லாம் பாடிப் பரவிப் புகழ்கின்றார் என்பதை நாம் அறிவோம்.

ஒரு கவிஞர்,

'கவிதைச் சுவையை வடித்தெடுத்தான்
கம்பன் கவிஎனப் பெயர்கொடுத்தான்

கம்பனை மறந்தால் தமிழ்ஏது
கவிதை என்பதும் கமழாது,

என்கிறார்.

கம்பராமாயணத்தை எரிக்கவேண்டும் என்று சிலர் கூறியபோது ஒருவர் பாடினார்,

'ஓலை எரியும் தாள்எரியும்
உள்ளத்து எழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதும்கவி
கனலில் வெந்து நீறாமோ?

என்ற பாடலை.

# 4. கம்பர் பெயர்க்காரணம்

கம்பர், கம்பர் என்று பெயர் பெற்றதற்குப் பல காரணங்கள் கூறுவர்.

- காளிகோயில் கம்பத்தின் அடியில் குழந்தையாகக் கிடந்து எடுத்து வளர்க்கப்பட்டமையால் கம்பர் என்று பெயர் பெற்றார்.
- இளவயதில் கம்பங்கொல்லையைக் காவல் புரிந்த காரணத்தால் கம்பர் எனப்பட்டார்.
- காஞ்சிபுரம் ஏகம்பநாதரை ஏகம்பன் என்றும் கூறுவர். அப்பெயரைப் பெற்றதால் கம்பர் எனப்பட்டார்.
- 'கம்ப நாடு' என்ற பகுதித் தலைவராக இருந்தமையால் கம்ப நாடாள்வார், கம்ப நாடன் எனப்பட்டார். அப்பெயரே கம்பர் என்றானது. இதற்கு

'தராதரத்தில் உள்ள தமிழ்க்குற்றம் எல்லாம்
அராவும் அரம்ஆயிற் றன்றே - இராவணனை
அம்பினால் வீழ்த்தான் அடிபரவும் ஆதித்தன்
கம்பநா டாள்வாள் கவி'

என்ற பாடலையும் காரணம் காட்டுவர்.

இக்காரணங்கள் அனைத்தும் பொருத்தமுடையதாகத் தெரியவில்லை.

## இயற்பெயரே

சோழர் காலத்தில் 10-12 ஆம் நூற்றாண்டுகளில் பலர் கம்பன் என்று பெயர் பெற்றிருந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறிகின்றோம்.

1. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம் பழங்கோயில் பழங்கொளூர் மகாதேவர் கோயிலில் உள்ள உத்தம சோழன் கல்வெட்டில் ஒரு அரசு அதிகாரி பெயர் 'கம்பன் இராமனாகிய உத்தம சோழப் பிருதிகங்கரையன்' (கி.பி. 977) (S ii XIX 169 ARE 352 of 1925)

2. விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம் கீழூர் வீரட்டானேசுவரர் கோயில் கருவறை வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டில் (முதலாம் இராசராசன் காலம் 985-1014)

'கம்பன் மூவேந்த வேளான் என்பவர் குறிக்கப்படுகிறார். இவருக்கு 'வீதி விடங்கன்' என்ற பெயரும் உண்டு.

'வேலியர்கோன் வீதி விடங்கன் விறற்கம்பன்
வாலியல்மான் சோழன் அதிகாரி - கோலப்
படியின்மேற் பொற்பூப் பைங்கோவல் வீரட்டர்
முடியின்மேல் வைத்தான் முயன்று,

என்பது அவன் கொடை குறித்த கல்வெட்டுப் பாடல். (S ii VII 863; ARE 2360 of 1902)

3. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருச்சிராப்பள்ளி வட்டம் திருக்கற்குடி என்ற உய்யக்கொண்டான் திருமலையில் சிவாலய முதல் பிரகார வெளிப்புறச் சுவரில் கருப்பூர்த் தலைவன் கம்பன் என்பவனின் மகன் செய்த கொடை கல்வெட்டுப் பாடலாக வெட்டப்பட்டுள்ளது.

'கருப்பூர்மன் கம்பனுக்குக் காதலன்சீர் நக்கன்
விருப்பூர் விழுமிய தேவர்க்கு - திருப்பூர்
விளக்குவைக்கத் தொண்ணூறாடு ஆங்களித்தான் மெய்யே
உளக்கருத்தால் சால உவந்து'

என்பது அப்பாடல். (S ii IV 585 ARE 98 of 1892)

மதுரைத் தமிழ்ச்சங்கச் செந்தமிழ் மூன்றாம் தொகுதி வேளூர்க் கம்பன் என்னும் ஆசாரியின் உலைபற்றிக் கூறுகிறது.

'கன்னன்அரை நாட்கொடுப்பான் காவேரி பாதிநாள்
அன்னை முலைகொடுப்பது அக்காலம் - பன்னும்
கலைவைத்த வேளூர்வாழ் கம்பன்எனும் கொல்லன்
உலைவைத்தால் தானூர்உண் ணும்,

என்பது அப்பாடலாகும். அக்காலத்தில் பொதுமக்கள் பலர் கம்பன் என்னும் பெயர் வைத்திருந்தது தெரிகிறது.

இவர்கள் பெயரைப் போலக் **கம்பன்** என்பதும் இயற்பெயராகவே கொள்ளலாம்.

# 5. கம்பர் காலம்

கம்பர் வாழ்ந்த காலம் பற்றிச் சரியாக அறிய இயலவில்லை. கி.பி. 9 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு வரை பலவாறாகக் கம்பர் காலம் கூறப்படுகிறது. தம் நூலில் சடையப்ப வள்ளல் பற்றிப் பல இடங்களில் குறிப்பிட்டிருந்தாலும் சோழ அரசர்களைப் பற்றிய நேரடியான குறிப்புகள் இல்லை. 'ஆதித்தன்' 'சென்னி' 'அமலன்' என்னும் பெயர்கள் இடம் பெற்றிருப்பினும் அப்பெயர்களுடன் விளங்கிய மன்னர்கள் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன.

திருவரங்கத்தில் கம்பர் தம் இராமாயணத்தை அரங்கேற்றியது பற்றிய ஒரு தனிப்பாடல் உள்ளது.

'எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்தநாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங்கு ஏற்றினானே'

சக வருடம் 807 பங்குனி மாதம் அத்த நட்சத்திரத்தன்று அரங்கேற்றம் தொடங்கியது. இதற்கு நேரான கி.பி. ஆண்டு 885.

ஆத்மநாத தேசிகர் பாடிய சோழ மண்டல சதகத்தில்

'திண்மை ஏறும் கம்பனிடம்
செய்யத் தகுமென் சிறப்பீந்து
நன்மை ஏறும் இராமகதை
நற்பேர் புவியில் தழைத்தேற
உண்மை ஏறும் திருவரங்கத்து
ஒருவன் சபையில் உத்தரநாள்

வண்மை ஏற அரங்கேற்றி
வைத்தார் சோழ மண்டலமே'

என்ற பாடல் உள்ளது.

இப்பாட்டில் அத்த நாள் என்பதற்குப் பதிலாக உத்தர நாள் என்று கூறப்பட்டுள்ளது.

## அத்தமா - உத்தரமா?

'எண்ணிய சகாத்தம்' என்று தொடங்கும் பாடலில் 'அத்தநாளில்' என்பதற்குப் பதிலாக 'உத்தரநாளில்' என்ற பாட வேறுபாடும் உள்ளது. மாதத்திற்கு ஒருநாள் மட்டுமே மிகச் சிறப்பாகக் கூறப்படும்.

சித்திரை - பவுர்ணமி; வைகாசி - விசாகம்; மார்கழி - திருவாதிரை; மாசி - மகம்; ஆவணி - அவிட்டம் போலப் பங்குனிக்குச் சிறப்பான நாள் உத்தரம். திருவரங்கம் கோயிலார் சமயச் சிறப்பால் பங்குனி உத்தரத்தையே தேர்ந்தெடுத்திருக்கக் கூடும். சோழ மண்டல சதகத்தில் உத்தரநாள் என்றே குறிக்கப்படுகிறது.

## மற்றொரு அரங்கேற்றப் பாடல்

'ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு - மூவலூர்ச்
சீரார் குணாதித்தன் சேயமையப் பாடினான்
காரார்கா குத்தன் கதை'

இப்பாட்டின்படி காலம் (1100+78) கி. 1178 ஆகிறது.

இரா.இராகவையங்கார் மதுரைச் செந்தமிழ் தொகுதி 3 இல் 'கம்பர் காலம்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இதனையே முடிவு செய்கிறார். மு. இராகவையங்காரும் இதனை ஆதரிக்கிறார். (பெருந்தொகை. ப.626)

ஆந்திர அரசன் வாரங்கல் பிரதாபருத்திரனோடு கம்பர் தொடர்பு கூறப்படுகிறது. பிரதாபருத்திரன் காலம் கி.பி. 1162-1197.

கம்பர் காலம் கி.பி. 885 என்பது சோழ மன்னன் ஆதித்தன் காலம் (871-907). அது பிற்காலச் சோழப் பேரரசின் தொடக்க காலம். அக்காலத்தில் கம்ப இராமாயணம் போல் ஒரு பெருங்காப்பியம் தோன்றுவது என்பது ஐயத்திற்கிடமானதாகும். திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணிக்குப் பின் எழுந்ததே இராமாயணம் என்பது அறிஞர் பலரின் முடிவு. சிந்தாமணி 10 ஆம் நூற்றாண்டு நூல். எனவே கம்பர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்றே கொள்ளலாம்.

கம்பரோடு சடையப்ப வள்ளலுக்கு இருந்த தொடர்பு யாவரும் அறிந்ததே. சடையப்பர் - அவர் மகன் சேதிராயன் என்ற பிள்ளைப் பெருமாள் பற்றிய கல்வெட்டுப் பாடல்கள் சில கிடைத்துள்ளன.

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டம் மூவலூர் மார்க்கசகாயேஸ்வரர் கோயில் நுழைவாயில் வலப்புறம்

'மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்மோதும் காவேரி - போயதுவும்
போர்மற் சடையன் புதுவையான் இல்லறத்தை
யார்போற்ற வல்லார் அறிந்து,

என்ற பாடல் வெட்டப்பட்டுள்ளது. (ARE 31 of 1925)

மயிலாடுதுறை வட்டம் சித்தக்காடு திருஞான சம்பந்த ஈசுவரர் கோயில் நுழைவாயில் வலப்புறம்

'மகாநிபுணன் செந்தமிழ்க்கும் கங்கை மரபினுக்கும்
சிகாமணி பிள்ளைப் பெருமாள் புதுவைமன் சேதிபனே''

என்ற பாடல் வெட்டப்பட்டுள்ளது. (ARE 33 of 1925) இப்பிள்ளைப் பெருமாள் சடையன் மகன் என்பர்.

இவ்விரு கல்வெட்டுப் பாடலில் காலக் குறிப்புக்கள் இல்லாவிடினும் எழுத்தமைதி கொண்டு கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எனத் தொல்லியல் துறையினர் கூறுவர்.

கம்பர் காலம் 12 ஆம் நூற்றாண்டு என்பதை இவை உறுதிப் படுத்துகின்றன. ஒட்டக்கூத்தர் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்று

முடிவு செய்யப்பட்டுள்ளது. கம்பர் ஒட்டக்கூத்தரின் சமகாலத்தவர் என்பது பல நிகழ்வால் (உத்தரகாண்டம் அளித்தது) உறுதிப்படுவதால் கம்பர் காலமும் கி.பி. 12 ஆம் நூற்றாண்டேயாகும்.

## ஒரு அகச்சான்று

இராமாயணம் மருந்துமலைப் படலப்பாடல் ஒன்றில் 'வீரன் தியாகமா வினோதன் தெய்வப் பொன்னி நாடு' என்ற தொடர் வருகிறது. மூன்றாம் குலோத்துங்கனுக்குத் 'திரிபுவன வீரதேவன்' என்ற பெயர் உள்ளது. அவனைப் பற்றிய தனிப்பாடல்களில் மூன்றாம் குலோத்துங்கன் 'வீரன்' என்று குறிக்கப்படுகிறான். மூன்றாம் குலோத்துங்கனுக்குத் ''தியாக வினோதன்'' என்ற பெயரும் உண்டு. எனவே இதன் மூலமும் கம்பர் மூன்றாம் குலோத்துங்கன் காலம் என்பது தெளிவாகிறது. கூவம் என்ற ஊர் தியாக சமுத்திரம் என்று பெயர் பெற்றது. கம்பர் பாடலால் தெரிகிறது. தியாக சமுத்திரம் தியாக வினோதன் பெயரால் ஏற்பட்டிருக்கலாம்.

## சதகப் பாடலில்

வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகத்தில் சக ஆண்டு 'ஆயிரத்து ஐம்பத்தொன்றில்' சடையன் மரபு புகழப்பட்ட தாகக் கூறுகிறது. அதற்கு நேரான கி.பி. ஆண்டு (1051+78) 1129 ஆகும். இதன்மூலமும் கம்பர் கி.பி.12 ஆம் நூற்றாண்டு என்று தெரிகிறது.

# 6. கொங்கு நாட்டில் கம்பர்

சோழ நாட்டில் பிறந்து வளர்ந்து கல்வி கற்றுப் பெரும்புலவராக விளங்கிய கம்பர் சோழ நாட்டையும் சோழ மன்னனையும் மதித்தவர் தான்.

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும்சோழ மண்டலமே''

என்று கம்பர் பாடியவர்தான். இப்பாடல் சோழ மன்னன் முன் பாடப் பட்டது அல்ல. அம்பர் என்ற ஊரில் எழுதிய பாடல். இருப்பினும் சடையப்பரை விட சோழனை உயர்வாக மதிக்க கம்பர் விரும்பவில்லை போலும்.

கம்பர் இராமாயணம் பாடி முடித்தபின் வள்ளல் சடையப்பர் பெயர் அமையப் பாடியதைச் சோழன் அறிந்திருக்க வேண்டும். கம்பர் தம் காப்பியத்தைச் சோழ மன்னன் அவையில் அரங்கேற்றாமல் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய விரும்பிச் சென்று கேட்டுள்ளார். அவர்கள் தில்லைத்தீட்சிதர் கையொப்பம் (பரிந்துரை) வேண்டும் என்று கூறியுள்ளனர்.

தில்லை தீட்சிதர் கையொப்பம் உடனே கிடைக்கவில்லை. தஞ்சாவூர் அஞ்சனாட்சி, மாவண்டூர்க் கருமான், அம்பிகாபதி (கம்பர் மகன் அல்ல) ஆகியோர் கையொப்பம் பெற்றுத் தில்லை தீட்சிதர் கையொப்பத்துடன் திருவரங்கம் வருகிறார் கம்பர்.

சடகோபனைப் பாடச்சொல்கின்றனர். கம்பர் சடகோபர் அந்தாதி பாடினார். சடகோபன் என்பது நம்மாழ்வாரை. திருமாலால் 'நம் ஆழ்வார்' என்று பாராட்டப்பட்டவர் நம்மாழ்வார். சடம் என்ற வாயுவை வென்றதால் 'சடகோபன்' எனப்பட்டார். திருமால் ஆலயங்களில்

தரிசிப்பவர்களது முடியில் வைத்து அனுக்கிரகம் செய்வதற்கும், பிறவற்றிற்குமாகத் திருமால் முன் வைக்கப் பெற்றுள்ள திருமாலின் திருவடி நிலைக்கு ‘சடகோபம்’ என்றே பெயர். பின் நூறு பாடல்கட்கு ஒரு முறை வந்த சடையப்பர் பெயரை ஆயிரம் பாடல்கட்கு ஒருமுறையாகக் குறைக்கச் செய்தனர்.

தன்னைப் பாடாதது மட்டுமல்ல, இராமகாதையில் தன் பெயர் இடம் பெறச் செய்யாததும், மாறாக சடையப்பர் பெயர் பல இடங்களில் குறிக்கப்பட்டிருப்பதும் சோழனுக்குக் கோபம் வருவதற்குக் காரணமாக இருக்கலாம். பின் விடைபெறும் போது கம்பர் பாடிய பாடலில் சோழன் கம்பரைக் கோபித்த செய்தி கூறப்பட்டுள்ளது. வாணிதாதன் (வாணியன் தாதன்) தொடர்பாகவும் கம்பர், சோழன் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம்.

கம்பர் சோழ நாட்டை விட்டுப் புறப்பட முடிவு செய்தபின் அமைதியாக வெளியேறவில்லை. தன் தகுதியைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் கோபம் கொண்டு வெளியேறியுள்ளார் என்பது தெரிகிறது.

கம்பர் பிரியும்போது சோழனை நோக்கி இரண்டு பாடல்கள் கூறியதாகக் கூறப்படுகிறது.

1. ‘காதம் இருபத்து நான்கொழியக் காசினியில்
ஓதக் கடல்கொண்டு ஒழித்ததோ - மாதவா
கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட்கு இடம்’

2. ‘மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந் தோதமிழை ஓதினேன் - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு’’

என்பன அப்பாடல்கள்.

ஏற்கனவே தாம் பயணம் செய்த ஆந்திர நாட்டு வாரங்கல் பகுதி, பாண்டிய நாடு, தென் பாண்டிய நாடு ஆகிய இடங்கட்குச் செல்லாமல்

கொங்கு நாட்டுக்குக் கம்பர் வரக் காரணம் சடையப்ப வள்ளலின் கொங்கு நாட்டுத் தொடர்பு ஒரு காரணமாக இருக்கலாம்.

சோழ நாட்டிலிருந்து புறப்பட்டுக் கம்பர் தன் கையேட்டுக் காரருடன் கொங்கு நாடு வந்தார். கையேட்டுக்காரர் 12 பேர் எனக் கொங்கு ஆவணம் கூறுகிறது.

# 7. குலப் பிரிவுகள் பாடிய கம்பர்

கொங்கு வேளாளர் பெருமக்கள் கொங்கு நாட்டின் பூர்வீகக் குடிமக்களா? அல்லது தொண்டை மண்டலம் - சோழ மண்டலத்தி லிருந்து குடி புகுந்து 'குடியானவர்' ஆன மக்களா என்பதில் இரண்டு வகையான கருத்துக்கள் உள்ளன. செப்பேடு, பட்டயங்கள் போன்ற ஆவணங்களும், பட்டக்காரர், பாளையக்காரர் வம்சாவளிகளும், தனிப்பாடல்களும், இலக்கியங்களும் குடியேற்றத்தையே கூறுகின்றன.

நற்குடி 48000 பேர்கள் வேளாளர்களும், 18 வகையான குடிபடைகள் 12000 பேர்களும் கொங்கு நாட்டுக்கு வந்தார்களாம். கொங்கு நாட்டு எல்லையில் தடுத்து நிறுத்தி,

'குலங் கோத்திரங்கள் அறியாமல் கொங்கில் விட மாட்டோம். ஒரு முகூர்த்தத்துக்குள் குலங்கோத்திரப் பிரிவுகளும் கவுண்டப் பட்டங்களும் செய்து காட்டினால் ஒப்புக்கொள்ளுவோம். இல்லாவிடில் வந்த வழியே தொண்டை மண்டலம் போய்ச் சேருங்கள்'

என்று சொன்னார்களாம்.

அப்போது கம்ப நாட்டாரிடம் வேளாளர்கள்,

'எங்கள் தென்திசை வேளாளர் குலங்களில் பிறக்கும் பிள்ளைக்குத் திருவால் 5 பணமும் விவாகங்களுக்கு கால் பணமும் 5¼ பணம் மேரைக்கு எங்கள் வம்சம் உள்ளவரை இயல் குடுத்து வருகிறோம். குலங் கோத்திரங்கள் பிரிவு செய்து தரவேணும்'

என்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்பவே கம்பர் குலங்கோத்திரங்கள் பிரிவு செய்த விபரம் :

'சேரன் பாண்டி யன்பனையன்
செங்கோல் பெரியன் செம்பவளன்

தூரன் ஆந்தை காடைகுலம்
துலங்கு முடியன் ஓதாளன்
பாரம் சுமந்த பண்ணைகுலம்
படியளந் துண்ணும் பயிரகுலம்
கூரன் வேந்தன் கோவேந்திரன்
கூறை பொன்னர் கொங்கினரே'

இந்தப் படியாகக் கம்பர் 5000 பிரபந்தம் பாடினார் என ஆவணம் கூறுகிறது.

# 8. கம்பர் பெற்ற திருமண வரி

காவிரியாறு கொங்கு நாட்டின் இடையே பாய்ந்து செல்லும் பேராறு.

ஒரு சமயம் பெரு மழை பொழிந்து காவிரியாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கரைகளை உடைத்துக்கொண்டு விளைநிலம் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கிவிட்டது. பயிர்கள் சேதமானது மட்டுமல்ல ஊர்களிலும் நீர் சூழ்ந்தது.

சோழ மன்னனும், மக்கள் பலரும் எவ்வளவோ முயன்றும் வெள்ளப் பெருக்கைத் தடுக்க இயலவில்லை. செய்வதறியாது எல்லோரும் திகைத்தனர். அப்போது அசரீரி வாக்கு ஒன்று கேட்டது. ''மன்னனும் மக்களும் ஏன் தயங்குகிறீர்கள். வெள்ளப் பெருக்கை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. தெய்வீக சக்தியுடைய ஒரு தமிழ்க் கவிஞர் வாக்குக்குக் காவிரி கட்டுப்படும். அக்கவிஞரால்தான் காவிரி அடங்கும்'' என்ற வாக்கைக் கேட்டனர்.

அப்போது கம்பரே அப்படிப்பட்ட கவிஞராக விளங்கினார். மன்னனும் மக்களும் சிலரும் கம்பரை அணுகி விபரம் கூறினர். கம்பர் அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டு காவிரி அருகில் வந்து,

''உலகு புரக்கும் காவிரித்தாயே! ஒரு கன்னி அழிந்ததுபோல கரைகடக்கலாமா? பொன்னியாகிய காவிரி கரைகடந்தாள் என்னும் பழிச்சொல் வரலாமா! ஆகவே தாயே நீ கரைகடக்கல் ஆகாது''என்ற பொருளில்,

''கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரைகடந்து போயிற்றென்று - இந்நீர்
உரைகிடக்க லாமோ உலகுடைய தாயே
கரைகடக்கல் ஆகாது காண்''

என்ற பாடலைப் பாடவே காவிரி கரைக்குள் அடங்கியது; மன்னனும் மக்களும் மகிழ்ந்தனர்.

மகிழ்ந்த அரசன் கம்பரைப் பார்த்து இந்த அரிய சாதனையைச் செய்து நாட்டைக்காத்த கம்பர்க்கு என்ன பரிசு வேண்டும் என்று கேட்டான்.

கம்பர் ''அரசே உழவர் பெருமக்கள் அரசுக்குத் திருமண வரியாக அரைக்கழஞ்சு பொன் தருகிறார்கள். இனிமேல் உழவர்கள் அரசுக்குச் செலுத்தும் அரைக்கழஞ்சு திருமண வரியை (வதுவை வரி) எனக்குத் தருமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டும்'' என்றார்.

அரசன் அவ்வாறே ஆணையிட்டான். அரசனின் இந்த ஆணையை ஒரு வெண்பாக் கூறுகிறது.

''கதுவி வருபொன்னி கரைகடவா வண்ணம்
பதுமமுகக் கம்பரவர் பாட - வதுவைவரி
மாடை அரைக்கழஞ்சு வண்கம்பர்க்கு ஈந்தபரிசு
ஏடர் குலோத்துங்கன் எழுத்து''

என்பது அப்பாடலாகும்.

இவ்வாறு வேளாளர்கள் வதுவை வரி பெற்ற கம்பர் நன்றிக் கடனாக வேளாளர் சமூகத்துக்கு மங்கல வாழ்த்துப் பாடிக் கொடுத்தார் என்பர்.

கம்பரின் கையேட்டுக்காரர்கள் வழிவந்தவர்கள் கொங்குப் புலவர்கள் என்பதால் கம்பர் தனக்குப்பின் வதுவைவரி வாங்கும் உரிமையைக் கொங்குப் புலவர்கட்கு அளித்தார் என்பர்.

நீண்ட நாளாகப் புலவர்கள் வாங்கிவந்த வதுவை வரி இடைக் காலத்தில் நின்றுவிடவே மீண்டும் வதுவைவரி வசூலிக்கும் வழக்கத் தைப் பால வேளாளர் தலைவர் மசக்காளி மன்றாடியார் ஏற்படுத்தினார் என்பர். இதனை ஒரு தனிப்பாடல் கூறுகிறது.

அதைக் குறிக்கும் பாடல்

''முன்னாள் உறந்தைவரும் அரைசர்பெரு மான்உலகில்
முடிமன்ன ரிடதம்பிரான்
முதுமொழி குலோத்துங்க சோழன்அருள் செய்தனன்
முத்தமிழ்க் கம்பநாடன்

அன்னாளி லேபொன்னி கரைகள்கட வாதுடன்
அடங்கஇசை பாடலுக்கா
ஆதித்தன் உள்ளளவும் அழியாத வதுவைவரி
அளித்தனர்கள் அன்றுமுதலாய்

பன்னாத நிலமைசெறி கொங்குநாட் டினில்மேவு
படிக்கார வித்வசனர்
பங்குஎன நடந்துவரு படிதனக்கு இடரதாய்
படித்தசிலர் கைக்கொண்டதை

இன்னாளி லேகீர்த்தி நிலையாக விடுத்தஅவ்
இயல்வாண ருக்களித்தான்
இங்கிதம தாகவரு கவசைநகர் வாழ்வுற்ற
இம்முடி மசக்காளியே!

என்பதாகும்.

## வதுவை வரிப் புலவர் தேர்வு

குலோத்துங்க சோழன் கம்பருக்கு அளித்த வதுவை வரி வாங்குவதற்கு உரிய புலவர்களை திருச்செங்கோட்டில் தேர்ந்தெடுப்பார்கள்.

''வளவன் எழுத்துப் படிக்கம்பர்க்கு ஆன வதுவைவரி
தெளியும் பழந்தமிழ் ஐவாணர் கொள்ளச் செயும்உரிமை
கொளஏற் றவர்தமைத் தேர்ந்தெடுக் கும்சபை கூடிவரும்
வளமை மிகுதிருச் செங்கோடை யும்கொங்கு மண்டலமே''

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும் (கார்மேகக் கவிஞர் - 31)

## கம்பர் காவிரியை அடக்கிய காரணம்

கொங்கு வேளாளர் பெருமக்கள் விரும்பியபடியே கம்பர் காவிரி வெள்ளத்தை அடக்கினார் எனக் கார்மேகக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது (30).

''கன்னி அழிந்தனள் கங்கை திறம்பினள்
கண்ணின்முனே
பொன்னி கரைகடந் தாள்எனும் நிந்தை
புவியிலுளோர்
பன்னி இகழாது அமர்எனக் கம்பர்ஓர்
பாச்சொலச்செய்
மன்னிய கங்கைக் குலத்தாரும் வாழ்கொங்கு
மண்டலமே''

என்பது அதைக்குறிக்கும் பாடலாகும்.

# 9. கம்பரைப் போற்றிய கொங்கர்

கொங்கு வேளாளர் பெருமக்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தது போல உலகில் வேறு எந்தச் சமுதாயமும் தங்கள் மொழிப் புலவர்களை ஆதரித்திருக்குமா என்பது ஐயமே.

சில வேளாண் பெருமக்கள் வீடுகளில் புலவர் பெருமக்கள் எப்பொழுதும் இருப்பார்களாம்.

'முத்து மணியிலங்கும் முகசாலை மண்டபத்தே
வித்வசனர் எந்நாளும் வீற்றிருக்கும வாசலினான்''

என்பது கொடுமணல் இலக்கியப் பகுதி.

உரிமையுடைய காணிப்புலவர் ஒவ்வொரு வேளாளர் குலத்தாருக்கும் முன்னாளில் இருந்தனர். அவர்கள் இல்லம் வந்து தங்கள் இல்லச்சிறப்பு, குலச்சிறப்பு, காணியூர்ச் சிறப்பு, கோயில் சிறப்பைப் பாடும்போது தலை, தோள், இடுப்புக்கு மூன்று ஆடை கொடுத்து பொன்னும் பொருளும் கொடுப்பர்.

தானியங்களை வீட்டுக்குக் கொண்டு வராமல் தோட்டத்துக் களத்திலேயே கொங்கு முறத்தால் வாரிக் கொடுத்த சமுதாயம் கொங்குச் சமுதாயம்.

''கவிதைரங்கப் புலவனையும் காப்பாற்றும் தாய்போல
தவறாமல் அவன்மனைக்குச் சாப்பாட்டுக் கேகொடுப்பான்''

என்பது ஒரு இலக்கியத் தொடர்.

புலவர்கள் குடியிருக்க புலவனூர், புலவர்பாளையம், புலவர்புரம் என்ற தனி ஊர்களை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் கொங்கு வேளாளர்கள். புலவன் காளிபாளையம் என்பதே பொலவக்காளி பாளையம் ஆயிற்று.

வேளாண்குலப் பெண்களும் புலவர்களை ஆதரித்துள்ளனர்.

''காயும் கறியொடு அன்னமும் சொன்னமும்
தாயின் பரிவொடு ஈதல் கற்றாய்''

என்று கூறைகுலத்துப் பழனிக்கவுண்டர் மனைவி சின்னம்மாளை ஒரு புலவர் பாராட்டுகின்றார்.

'ஐந்தமிழ்வாணர்' என்றும் 'ஐந்து படிக்காரர்' என்றும் புகழப்பட்ட பட்டன், புலவன், பண்பாடி, தக்கை கொட்டி, கூத்தாடி இவர்களை முன்னிலைப்படுத்தி அவர்கள் வாழ்த்துப் பெற்றே கொங்கு வேளாளர் சீர்கள் செய்வர் என்று வேளாளர் மங்கல வாழ்த்துக் கூறுகிறது.

இவ்வாறு புலமை நலம் தெரிந்த வேளாளர்களைப் பல புலவர்கள் பாடிப் பரவினர். அவர்களில் கம்பரே முதன்மையானவர்.

''கம்பர்செந் தமிழும் இரட்டையர் மொழிந்த
கட்டளைக் கலித்துறைக் கவியும்
கனிந்ததெள் அமிர்தம் எனப்புக ழேந்தி
களித்திடும் கலம்பகத் தமிழும்

பண்புசீர் ஒட்டக் கூத்தனாம் புலவன்
பகர்ந்திடும் பைந்துளா யிரமும்
பசுந்தமிழ் தேறு வாணியர் தாசன்
பரிவுடன் புகன்றசெங் கவியும்

செம்பியன் கவியும் வழுதிமார் கவியும்
சேரமான் செப்பிய கவியும்
தேவர்தம் சிறையை மீட்டவேள் குமரன்
தெளிவுற இசைத்தவெண் பாவும்

சம்பந்தர் கவியும் அவ்வைதன் தமிழும்
சங்கத்தார் செப்பிய தமிழும்
தவத்தினால் மிகவும் புகழ்கொண்ட வேளாளர்
தகைமையைச் சாற்றுதற்கு எளிதோ''

என்ற பாடல் வேளாளர்களைப் பாடிய புலவர்களைத் தொகுத்துக் கூறுகிறது.

இவ்வாறு புலவர்களைப் போற்றிப் பாதுகாப்பதையே வாழ்வின் குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்ட கொங்கு வேளாளர் பெருமக்கள் பெருங்கவிஞரான கம்பர் பெருமான் கொங்கு நாடு வந்தால் வாளாவிருப்பார்களா !

நாடு முழுவதிலும் உள்ள பல வேளாளர் பெருமக்கள் போட்டி போட்டிக் கொண்டு கம்பரை வரவேற்று ஆதரித்துப் போற்றியிருக்க வேண்டும். ஆனால் கொங்குவேளாளர்களில்,

கோட்டாறு குலம்
சாத்தந்தை குலம்
செங்குன்னி குலம்
செம்ப குலம்
வண்ணக்கன் குலம்
வெண்டுவன் குலம்

சார்ந்த வேளாளர் பெருமக்கள் கம்பரோடு கொண்ட தொடர்பு பற்றிய பாடல்கள் கிடைத்துள்ளன.

### அடிமையான காரணம்

காவிரி கொங்கு நாட்டாரின் எச்சில் என்றும், சடையப்ப வள்ளல் இல்லத்தில் விருந்துண்டு கைகழுவுவார்தம் எச்சில் என்றும் சோழனுக்குக் கம்பர் காட்டியதால் கம்பர் மீது பாசம் கொண்டு அடிமை ஆயினர். இதனை,

''பார்த்திப கங்கையில் சேரனும் சோழனும் பாண்டியனும்
கூத்தழை மாநகர் வீற்றிருந் தார்முன் குலோத்துங்கமால்
கார்த்திகைக் கம்பரைக் காவேரி எச்சிலைக் காட்டுதற்கு
மாத்தெளித் தேஅடி மைப்புகு வார்கொங்கு மண்டலமே''

(வால. 67)

''மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவு நீர்போகும் காவிரியே - பொய்கழுவும்
போர்வேற் சடையன் புகழ்மரபி னோர்பெருமை
யார்கூற வல்லார் அறிந்து''

என்ற பாடல்கள் விளக்கும்.

## கோட்டாறு குலத்தார்

கோட்டார் அல்லது கோட்டாறு என்ற இடத்தின் அடிப்படையில் இக்குலம் பெயர் பெற்றிருக்கலாம். கொங்கு வேளாளர், பால வேளாளர் சமூகத்தில் இக்கோட்டாறு குலம் குறிக்கப்படுகிறது. சேவூர் மன்னீசுவரர் கோயில் கல்வெட்டில் கோட்டாறு குல அய்யன் அரைசன் என்பார் குறிக்கப் பெறுகிறார்.

கோட்டாறு குலத்தில் மசக்காளி வேலன் என்பவர் வாழ்ந்து வந்தார். தான் கல்வி கற்றதுடன் கற்றவர்களைப் போற்றும் பண்பு மிக்கவர்.

இம்மசக்காளி வேலன் கம்பரை ஆதரித்துப் போற்றியது மட்டுமல்ல, அவர் பயணம் செய்தபோது அவரது பல்லக்கையும் சுமந்து கம்பர் மீது கொண்ட தன் பேரன்பினைக் காட்டினார்.

கொங்கு மண்டல சதகம் பாடிய வாலசுந்தரக் கவிராயர் தன் சதக நூலில் மசக்காளி வேலன் செயலைப் புகழ்ந்து கூறுகிறார்.

''நாட்டாரும் கொங்கில் இருபத்து நாலெனும்
நாட்டிலெங்கும்
பாட்டால் புகழ்கின்ற கம்பர்பல் லக்குப்
பரிந்தெடுத்துக்
கோட்டாறு கோத்திரன் மசக்காளி வேலன்
கொலுவில்வைத்து
வாட்டாறு சோழன் திறைகொளு வோன்கொங்கு
மண்டலமே''

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும் (85).

## சாத்தந்தை குலத்தினர்

சாத்தன்+தந்தை என்ற இரு சொற்கள் சேர்ந்து 'சாத்தந்தை' என மாறுவதற்குத் தொல்காப்பியர் இலக்கண விதி கூறுகிறார். அச்சாத்தன் தந்தையைக் குல முதல்வராகக் கொண்டவர்கள் சாத்தந்தை குலத்தினர்.

சங்க இலக்கியத்தில் சாத்தந்தையார் என்ற ஒரு புலவர் பெயர் குறிக்கப்படுகிறது. இடைக் காலத்தும் பல அரசு அலுவலர்கள் சாத்தந்தை என்ற பெயருடன் பதவி வகித்ததைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. மூவேந்தரால் மதிக்கப்பட்டுப் பெருமை படுத்தப் பட்டவர் உலகபுரம் உலகுடையான் என்ற சாத்தந்தை குலத்தலைவர்.

கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெள்ளோடு - கனகபுரத்தில் தோன்றிப் பாண்டியன் தளபதியாக, அமைச்சராக ஆகிக் கொங்கு நாட்டில் நிர்வாகம் செய்த போது பவானியாற்றைத் தடுத்து அணைகட்டி 91 கிலோமீட்டர் வாய்க்கால் வெட்டி சாமை விளையாத இடத்திலும் சம்பா விளையச் செய்த மாவீரன் காலிங்கராயன் சாத்தந்தை குலத்தினர்.

வெள்ளோடு நிர்வாக வசதிக்காக தென்முகம் வடமுகம் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. தென்முகம் வெள்ளோட்டில் உலகபுரம், கனகபுரம், தேவபுரம் (தேவணம்பாளையம்) என்ற மூன்று பிரிவு உண்டு.

தென்முகம் வெள்ளோட்டில் சாத்தந்தை குலத்தில் கந்தய்ய கவுண்டர் பேரனும், நல்லய்ய கவுண்டர் மகனும் ஆகிய முத்தய்ய கவுண்டர் என்பவர் வாழ்ந்து வந்தார். தமிழ் கற்ற அவர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்துப் புகழ் கொண்டவர். அவர் கல்லும் காவேரியும், சந்திர சூரியரும் உள்ளவரை நானும் என்வர்க்கத்தாரும் கம்பருக்கு அடிமையாக இருப்போம் என்று அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தார்.

இச்செய்தியை,

''கல்லும் காவிரியும் சந்திராதித்தர் உள்ளமட்டும்
கம்ப நாடன்
சொல்லிய செந்தமிழ்க்கு அடிமைதுரை நாங்கள்என்ற
சோமா பூமேல்
வல்லமைசேர் வெள்ளோடை சாத்தந்தை கந்தயவேள்
மைந்தன் கீர்த்தி
நல்லயவேள் ஈன்றெடுத்த முத்தய்ய மகீபதியே
நனின மாலே''

என்ற பாடல் விளக்குகிறது.

### செங்குன்னி குலத்தார்

செங்குன்றி என்னும் பொன்நிறை காணப் பயன்படுத்தும் குன்றிமணியைக் குலச்சின்னமாகக் கொண்டவர்கள் செங்குன்னி குலத்தார்.

செங்குன்னி குலத்தாரில் ஒரு பிரிவினர் வாழவந்தி நாட்டிலிருந்து கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு வட்டூரில் குடியேறினர். வட்டூர்ச் செங்குன்னி குலத்தில் தோன்றிய 'குப்பண்ணப் பரதேசி' திருச்செங்கோட்டில் வாழ்ந்த மிகப்பெரிய அருளாளர்.

வட்டூர்ச் செங்குன்னி குலத்தார் கம்பரை ஆதரித்துப் போற்றினர்.

கம்பருக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தனர்.

கம்பரின் பல்லக்கைச் சுமந்தனர்.

காளாஞ்சி ஏந்தினர்.

இச்செயல்களால் வட்டூர்ச் செங்குன்னி குலத்தார் மிகப்பெரும் புகழ்பெற்றனர். இச்செயல்களை,

''மேதினி கம்பர் விளங்கிய தமிழ்க்காய்
சாசனம் கொடுத்தும் தண்டிகை சுமந்தும்
அன்புடன் பொற்கா ளாஞ்சி ஏந்தியும்
இன்ப மாய்வெகு கீர்த்தியும் பெற்றோர்''

என்ற செங்குன்னிகுல அகவல் இவற்றை விளக்குகிறது.

### செம்பன் குலத்தார்

'செம்பன்' என்ற குல முதல்வர் பெயரால் இக்குலத்தார் பெயர் பெற்றனர். சிலர் இக்குலத்தைச் 'செம்பொன்' குலம் என்றும் குறிப்பர்.

தாங்கள் குடியேறிய இடங்களில் எல்லாம் செம்பாபுரி, செம்பங்குடி, செம்பானூர், செம்பைக் கழனி, செம்பத்தொழு, செம்பாண்டாம்பாளையம், செம்பையூர் என்று பெயர் வைக்கும் குலப்பற்று உடையவர்கள்.

செம்பகுலத்தில் 'அமராவதி' என்ற வள்ளல் பெருமகன் வாழ்ந்து வந்தார். இரவலர்க்கும், புலவர் பெருமக்களுக்கும் வாரி வாரி வழங்கி வறியவர் ஆகிவிட்டார். கடன் பெற்றும் ஈகையதாகிய தனது கடமையைச் செய்தார். இனி எவராவது வந்தால் ஈகை செய்ய ஒன்றும் இல்லை. ஈதல் இயையாத போது சாதல் இனியது என்று வள்ளுவர் வாக்குக்கேற்ப இறக்க வேண்டி பாம்புப் புற்றில் கையை விட்டார். இவர் நல்ல கொடைக்கையைப் பார்த்து நாகம் தன் நாகமணியை உமிழ்ந்தது. அதைக்கொண்டும் ஈகை செய்தார்.

முன்பு செம்ப குல அமராவதி செல்வத்துடன் வாழ்ந்தபோது கம்பருக்கு அடிமை முறி எழுதிக் கொடுத்தார். இதைக் கொங்கு மண்டல சதகத்தில் வாலசுந்தரக் கவிராயர் ஒரு பாடலில் குறிக்கின்றார்.

''அம்பல வாணர்மின் காமாட்சி யம்மன் அணிவரைமேல்
கம்பருக்கு என்றும் அடிமையென் றேபற் கடியரவில்
செம்பர் குலாதிபன் கைநீட்டி நாவில் திகழ்முத்தமாம்
வம்பர்கள் கண்டன் அமரா பதிகொங்கு மண்டலமே''

என்பது சதகப் பாடலாகும் (80).

### வண்ணக்கன் குலத்தினர்

'வண்ணக்கன்' என்ற அழகுத் தமிழ்ச் சொல்லைக் குலப் பெயராகக் கொண்டவர்கள் வண்ணக்கன் குலத்தினர். சங்கப் புலவர்கள் பலர் இப்பெயரைப் பெற்றுள்ளனர் (வடம வண்ணக்கன்

பெருஞ்சாத்தன், புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழான் போன்ற பலர்) ஈரோடு வட்டம் அறச்சலூர் சமணர் குகையில் இசை, நாட்டிய அடைவு எழுத்துக்களை 2000 ஆண்டுகட்கு முன்பு பொறித்தவர் மணியன் வண்ணக்கன் தேவன் சாத்தன் என்பவர்.

நாணயம், மணிக் கற்களைப் பரிசோதிப்பவர்க்கு வண்ணக்கன் என்ற பெயர் உண்டு என்பதைத் தொல்காப்பிய உரை மூலமும் கல்வெட்டுகள் மூலமும் அறிகின்றோம்.

வெள்ளலூர், திங்களூர், பெருந்தலையூர், மொஞ்சனூர், ஆதியூர் போன்ற இடங்களில் வண்ணக்கன் குலத்தார் ஆலயப்பணி செய்துள்ளனர்.

வண்ணக்கன் குலத்தில் நல்லவன் என்ற பெயருடைய பெரும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். பெயருக்கு ஏற்பவே அவர்தம் பண்பு நலன்கள் இருந்தன. தம் செயல்களால் விண்ணுலகத் தேவர்களையும், பெண்களையும், உலகினர் பலரையும் மகிழ்வித்தார். பல இலக்கியங் களோடு கம்பரின் இராமாயண நூலையும் படித்து இராமருக்குச் சிறப்புச் செய்தார். கம்பருக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தார்.

வேளாளர்களின் 96 கீர்த்திகளைப் பெற்ற அவரால் கொங்கு நாடே பெருமைப்பட்டது. கொங்கு மண்டல சதகம் இயற்றிய வாலசுந்தரக் கவிராயர் தம் சதக நூலில் நல்லவன் புகழ்பாடுகிறார் (எண் 100).

'விண்ணுக்கும் மாதுக்கும் தேவர்க்கும் ராமர்க்கும்
மென்முகிற்கும்
பெண்ணுக்கும் கற்புக்கும் காத்தவன் காண்கம்பர்
பேர்விளங்க
மண்ணுக்கும் கீர்த்திக்கும் தொண்ணூறும் ஆறும்
என்றடிமை
வண்ணக்கன் கோத்திர நல்லவன் வாழ்கொங்கு
மண்டலமே'

என்பது அவர் பாடலாகும்.

## காளிக்கவுண்டர்

திங்களூர் வண்ணக்கன் குலத்தில் பட்டிலிங்கக் கவுண்டர் என்பவர் சிறப்புடன் வாழ்ந்து வந்தார். அவர் மகன் பெயர் காளிக்கவுண்டர். பெரும் செல்வந்தர். புலவர்களை ஆதரிப்பவர்.

திங்களூர் செங்குந்தர் மரபில் தோன்றியவர் அவினாசிப் புலவர். அவர் திங்களூர் அருகில் உள்ள அருள்மலை முருகன்மீது நொண்டி நாடகம் ஒன்று இயற்றினார். அவினாசிப் புலவரே காலில் சலங்கை கட்டிக்கொண்டு ஆடிப்பாடி நடிப்பாராம்.

ஒருமுறை வண்ணக்கன் குலக் காளிக் கவுண்டரிடம் வந்து நொண்டி நாடகத்தை நடித்துக் காட்டினார். காளிக் கவுண்டர் மகிழ்ந்து பெரும் பொருள் கொடுத்து புலவர் பயணம் செய்ய ஒரு குதிரையும் அளித்தார். இதைக் குறித்துப் பாடிய அவினாசிப் புலவர் வண்ணக்கன் குலத்தாரின் கம்பர் தொடர்பையும் குறிக்கின்றார்.

''காராளர் குலத்துதித்த தூயன் - நல்ல
காரைச்சிறை விடுவித்துப் பாராளும் கெம்பீரன்
ஏரெழுப துழ்படித்த கம்பன் - தனக்கு
என்றும் அடிமைநாங்கள் என்றெழுதிக் கொடுத்தோன்

வண்ணக்கன் குலத்துதித்த தூயன் - நல்ல
உண்மையுள்ள பட்டிலிங்கன் மன்னனரு ளால்வந்த
கண்ணின்மணி யானபுண்ய சாலி - துரைக்
காளிமன்னன் அவனொரு சாளிகைப்பொன் கொடுத்தான்''

என்பது அவினாசிப் புலவர் பாடிய பாடலில் ஒரு பகுதி.

## வெண்டுவன் குலத்தார்

கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பழமங்கலம் வணிகக் குழுக் கல்வெட்டில் 'வெண்டுவன் அதிருக்குரையான்' என்ற பெயர் காணப்படுகிறது. எனவே வெண்டுவன் என்னும் குல முதல்வர் வழியில் வந்தவர்கள் வெண்டுவன் குலத்தினர் ஆகலாம்.

மண உறவாலும், விலைக்குப் பெற்றும் பல காணியூர்களைப் பெற்றவர்கள். ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே வணிகக் குழுவினர் கொங்கு நாட்டில் பாதுகாப்புடன் வியாபாரம் செய்ய 'அடைக்கலம்' என்ற நகர்ப் பகுதிகளை ஏற்படுத்தியவர்கள் வெண்டுவன் குலத்தினர்.

புகழ்பெற்ற வெண்டுவன் குலத்தில் தீத்தான் செவ்வந்தி என்ற வள்ளல் வாழ்ந்து வந்தார். புலவர்கள், இரவலர்கள் ஆகியோரை ஆதரித்தவர். தமிழ் கற்றவரான வெண்டுவன்குலத் தீத்தான் செவ்வந்தி பிறரைப்போல் கம்பருக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்தது மட்டும் அல்ல,

கம்பருக்குத் தெரியாமல் கம்பர் பயணம் செய்த பல்லக்கைக் சுமப்பவர்களில் ஒருவராகப் பல்லக்குச் சுமந்தார்.

கம்பர் விருந்துண்ட பின் தாம்பூலம் தரித்துப் பின் எச்சில் உமிழும் காளாஞ்சி என்ற பாத்திரத்தை ஏந்தி அருகில் நின்றார்.

கம்பரின் திருப்பாதங்களைச் சுமக்க இந்தச் செருப்புக்கள் என்ன புண்ணியம் செய்ததோ என அவற்றைத் தம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கொண்டாடினார்.

வெண்டுவன் குலத் தீத்தான் செவ்வந்தியின் இந்த அரிய செயல்களை வாலசுந்தரக் கவிராயர் தன் கொங்கு மண்டல சதகத்தில் பாடியுள்ளார்.

அப்பாடல்,

''தண்டிகை தாங்கியும் காளாஞ்சி ஏந்தியும்
தமிழ்செய்கம்பர்
அண்டையில் பாதச்சம் மாளியும் தூக்கி
அடிமையும்பட்டு
வெண்டுவன் கோத்திரம் தீத்தான் செவ்வந்தி
விளங்குகங்கை
மண்டலம் கீர்த்தி தனைப்படைத் தான்கொங்கு
மண்டலமே''

என்பதாகும் (83).

# 10. கம்பர் புகழ்மொழிகள்

ஓலைச்சுவடிகளில் 'கம்பர் வாக்கு' என்ற தலைப்பில் கீழ்க்கண்ட பாடல்கள் உள்ளன.

1. ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊருக்குச்
சென்று வரஅணித்தாய் செய்வாரும் சொற்கேட்டால்
என்றும் உழவே இனிது.

2. மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை
ஆழி தரித்தே அருளும்கை - சூழ்வினையை
நீக்கும்கை என்றும் நிலைக்குங்கை நீடூழி
காக்கும்கை காராளர் கை.

3. தேரோடும் மன்னவர் வேதியர் மூன்றினில் சீர்வைசியர்
கூரிடும் பின்னோர் முதலான சாதி குலங்களுக்கு
நீரிடும் மேழிச் சிவனாக வந்து நிலம்உழுகும்
சோறிடும் மேழியன் வேளாளச் சாமி துணைநமக்கே.

4. வீறுடன் வார்த்தை யுண்டோ மாமேருக் கப்பால் இப்பால்
ஊறிடும் கிணறு போல உதவிய செங்கை மேகம்
பாறிடும் கலிய கன்ற பாணிவே ளாளர் தம்மை
சோறிடும் தெய்வம் என்று சொல்லுவோம் சொல்லு வோமே"

5. ஆழித்தேவர் அலைகடலில் ஆடும்தேவர் அம்பலத்தில்
வாழித்தேவர் குலமக்கள் வையம்தோறும் பெருக்காளர்
ஊழித்தேவர் எல்லோரும் உலகம்காக்க வல்லாரோ
மேழித்தேவர் அல்லாமல் வேறோர்தெய்வம் கூறோமே.

# 11. கொங்குப் பாடல்களில் கம்பர்

கொங்கு வேளாளர் பற்றிய பல்வேறு காணிப்புலவர்கள் பாடிய தனிப்பாடல்களிலும், சிற்றிலக்கியங்களிலும் பல இடங்களில் கம்பர் மிகவும் சிறப்பித்துக் கூறப்படுகிறார்.

**1. வேளாளர் கீர்த்திப் பாடல்**

'சிவன்உமை அன்பர்க்கு இரவில் முளைவாரிச்
　　செல்வமுடன் அமுதளித்தும்
சேடன் பணாமுடி நாகத்தின் மணிதன்னைச்
　　செந்தமிழ் தனக்குமீந்தும்
சீர்பெற்ற பழையனூர் நீலிபலி கொண்டிடும்
　　செயகங்கா குலமரபினோர்
சித்திர மேழிக்கொடி குவளை மாலையுயர்
　　தென்றல்காற் சிறைதவிர்த்தோர்
சிங்கா தனம்பெற்ற கம்பர் தமிழ்க்கடிமை
　　செய்தினிய கீர்த்திபெற்றோர்''

**2. வேளாளர் வாசல்வளம்**

''சேர லார்கள் பணிந்திடும் வாசலே
　　செம்பொன் மேருவுக்கு இணையான வாசலே
பாரில் அன்னக்கொடி கட்டிய வாசலே
　　கம்பர் பட்சம் தவிராத வாசலே

வீர லட்சுமி விளங்கிடும் வாசலே
　　விருது காளம் முழங்கிடும் வாசலே
கார நீர்குடை யாகர வாசலே
　　கங்கை பாலகர் கல்யாண வாசலே''

### 3. வேளாளர் சமூகச் சிறப்பு

''அம்புவியில் மிக்கான சித்திரமேழிக் கொடிக்கு
அதிபர்என வந்த சமூகம்
அரவின்மணி தன்னையே கவிவாணர் தங்களுக்கு
அன்பாய்க் கொடுத்த சமூகம்
கம்பர்தன் தமிழ்பெற்ற கீர்த்தியும் புகழவே
கனிவுகூர்ந் துற்ற சமூகம்
காசினியில் மிக்கான மேன்மைகொள் சமூகமது
காராளர் தன்சமூகமே''

### 4. செங்குன்னிகுல அகவல்

''பரமனுக்கு அன்னம் பகிர்ந்த காராளர்
புத்தினில் இருக்கும் பேரர வத்தின்
உத்ததோர் வாயில் உயர்மணி வாங்கி
புவியினில் அதிக புகழ்பெற வேண்டி
கவிஞருக்கு அளித்த கங்கை வங்கிசத்தோர்
முந்தனுக் காயி முன்னங் கையினில்
சந்தனம் உறைத்த தரும சரீரர்
மேதினி கம்பர் வழங்கிய தமிழ்க்காய்
சாசனம் கொடுத்தும் தண்டிகை தாங்கியும்
அன்புடன் பொன்னின் காளாஞ்சி ஏந்தியும்
இன்ப மாய்வெகு கீர்த்தியும் படைத்தோர்''

### 5. வெள்ளோடு பெரியண்ணன் குறவஞ்சி

''அன்புயர் நீலி தன்பழி யதற்கு
அழலுடன் புவிமேல் பழியது கொடுத்தோர்
சந்ததி மாறிலும் செந்தமிழ்க் கம்பர்க்கு
அடிமைநாம் எனவே திடமதாய்ப் பகர்ந்தோர்''

**6. அருள்மலை நொண்டி நாடகம்**

''காராளர் குலத்துதித்த தூயோன் - நல்ல
காரைச்சிறை விடுவித்த பாராளும் கெம்பீரன்
ஏரெழுப தும்படித்த கம்பன் - தனக்கு
என்றும் அடிமைநாங்கள் என்றெழுதிக் கொடுத்தோன்

வண்ணக்கன் குலத்துதித்த தூயன் - நல்ல
உண்மையுள்ள பட்டிலிங்கன் மன்னனரு ளால்வந்த
கண்ணின்மணி யானபுண்ய சாலி - துரைக்
காளிமன்னன் அவனொரு சாளிகைப்பொன் கொடுத்தான்''

**7. திருக்கை வழக்கம்**

'நாவில் புகழ்க்கம்ப நாடர்க்கு அடிமைஎன்றே
மாவைக் கரைத்துமுன்னே வைக்கும்கை'

**8. தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி**

''முன்னாடை கீறி முளைச்சிலந்தி காட்டுதற்குப்
பொன்னாடை கீறிப் புகழ்படைத்த காராளன்

பழையனூர் நீலி பழிக்கா எழுபதின்மர்
விழையுந்தீ மீதினிலே வீழ்ந்து பழிதீர்ந்தோன்

கம்பர்க்கு அடிமைமுறி கையால் எழுதுகின்றோன்
வம்பர்க்கு அடங்காத வாள்வீம னாகவந்தோன்

பையரவின் வாய்மணியை பாவலர்க்கு நீட்டியுமே
வையகமும் வானுலகும் வாழ்த்தும் புகழ்படைத்தோன்''.

**9. வேளாளர் புகழ்**

''கண்டுகுரு புத்திரனார் காவடியி லேசுமந்தார்
தண்டிகையில் கம்பர் தனைச் சுமந்தோம்

**10. பண்ணைகுல வேளாளர் பாடல்**

''கருணைகொண்டு அரவின்மணி வாணர்க்கு உதவியே
கதிமைபெறு வேளாளன்நீ
காவலன் மதிக்கவும் ஆடைகீ றிச்சிலந்தி
காண்பிக்கும் வேளாளன்நீ
திருவழுந் தூரில்வரு கம்பநா டர்க்கடிமை
திகழ்கின்ற வேளாளன்நீ
சிவனுடைய பசியகல முளைவாரி அமுதுதவி
செய்கின்ற வேளாளன்நீ''.

**11. மங்கல வாழ்த்து**

''கம்பர் சொன்ன வாழ்த்து உரைத்து
மங்கலமும் கன்னி கொல்ல''

''என்குரு கம்பர் இணையடி வாழி''

# 12. கம்பர் நினைவைப் போற்றும் கொங்கர்

கொங்கு நாடு வந்த கம்பரை கொங்கு மக்கள் வரவேற்று உபசரித்தனர். அவரை நன்கு மதித்தனர். உபசரிப்பைப் பெற்ற கம்பர் வேளாளர்கட்கு நான்கு இலக்கியங்கள் பாடியளித்தார். அவை

மங்கல வாழ்த்து
கம்பர் வாழி 16
ஏரெழுபது
திருக்கை வழக்கம்

என்பன.

முன்பு வேளாளர் திருமண வீடுகளில் மங்கலன் கம்பர் வாழி 16 பாடி அதன்பின் மங்கல வாழ்த்து இசைப்பார். இதை

''கம்பர் சொன்ன வாழ்த்து உரைத்து
மங்கலமும் கன்னி சொல்ல''

என்பதால் அறியலாம். இப்போது மங்கல வாழ்த்துக்கு முன் 'கம்பர் வாழி 16' பாடப்படுவதில்லை. ''பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க'' என்று வாழ்த்துவது 'கம்பர் வாழி 16' என்பதையே குறிக்கலாம்.

முன்பு கம்பர் வாழி 16 பாடி மங்கல வாழ்த்து இசைத்தபின் திருமண வீடுகளில் புலவர் ஏரெழுபதும், திருக்கை வழக்கமும் படிப்பார். எல்லோரும் அமைதியாகக் கேட்பர். இதைப் பட்டயங்கள்

'யெங்கள் வம்மிஷங் கலியாணத்தில் வாழிச்சீரும்
மங்கல வாழ்த்தும் ஏரெழுபதும் திருக்கைவழக்கமும்
படித்துவார காலத்திலே''

'கொங்கு இருபத்துநாலு நாட்டுக்கும் புலமையென்று
வரிசையும் குடுத்து ஏரெழுபதும் கம்பர்வாழி
பதினாறும் படித்துக்கொண்டு கலியாணத்துக்கு
அரைக்கழஞ்சு மாடைப்பணமும் குடுத்து''

என்று கூறுகின்றன. கொங்கு வேளாளர் திருமண வீடுகள் முன்பு இலக்கிய மேடையாகத் திகழ்ந்துள்ளன.

''இவையில்லாமல் கலியாணம் நடந்தால்
அது குறைச்சலாகும்'' என்று பட்டயம் கூறுகிறது.

கம்பர் கொங்கு நாடு வந்து மீண்டும் சோழநாடு சென்றபின் கொங்கு நாட்டில் இருக்கின்ற புலவர்களைக் கம்ப நாடர் என்றே கொங்கு மக்கள் அழைத்தனர்.

ஓதாளர் குலத்து ஆண்ட பெருமாள் ஒருமுறை ஆயிரம் புலவர்களைக் கூட்டி மிகப்பெரிய விருந்தளித்தார். அவர் அதை ஆயிரம் கம்ப நாடர்கட்கு உணவிட்டேன் என்றே கூறி மகிழ்ந்துள்ளார். இதைக் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது (89).

'ஆதார மாகித் தமிழ்க்கம்ப நாடர்கள் ஆயிரம்பேர்
தாதாவும் என்னத் தனைநினைந்து ஏத்தத் தமிழ்க்கிரங்கி
ஓதாளன் ஆண்ட பெருமாள் விளங்கும் உலகறிய
மாதா எனப்புகழ்ந்து அன்னமிட் டான்கொங்கு மண்டலமே'

என்பது கொங்கு மண்டல சதகப் பாடலாகும்.

ஒரு கொடை என்றென்றைக்கும் நிலைத்து நிற்க வேண்டும் என்பதைக் குறித்து

'சந்திர சூரியர் உள்ளவரை'
'கல்லும் காவிரியும்
புல்லும் பூடும் உள்ளவரை''
''ஆத்து மணலும் ஆவிரம்பூவும் உள்ளவரை''

என்று கூறுவார்கள். கொங்கு ஆவணங்களில்,

''கம்பர் தமிழ் உள்ளவரையும்''

என்று எழுதப்பட்டுள்ளது. அதனால் சந்திரசூரியர் உள்ளவரை கம்பர் தமிழ் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று கொங்கு மக்கள் நம்பினர் என்று தெரிகிறது.

# 13. வேளாளரின் முடி சூட்டும் உரிமை

அரச குடும்பத்தில் பிறந்த இளவரசன் அரசுப் பொறுப்பேற்று ஆட்சி நடத்த வேண்டுமெனில் அவன் அரசனாக முடி சூட்டிக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு அவன் முடி சூட்டிக் கொள்வதற்குரிய முடியை எடுத்துக் கொடுக்கும் உரிமையும், முடி சூட்டும் உரிமையும் வேளாளர்கட்கு உரியது. இம்மரபை நன்கு அறிந்த கம்பர் இராமன் முடிசூட்டு விழாவில் வெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் மரபில் முன்னோன் ஆன ஒரு வேளாளர் எடுத்துக் கொடுக்க வசிட்டர் முடி சூட்டியதாகப் பாடியுள்ளார்.

''அரியணை அனுமன் தாங்க
அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன்வெண் குடைக விக்க
இருவரும் கவரி பற்ற
விரைசெறி குழலி ஓங்கும்
வெண்ணையூர்ச் சடையன் தங்கள்
மரபினோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மவுலி''

என்பது அதைக்குறிக்கும் பாடலாகும்.

இப்பண்டைய வழக்கத்தை விட ஒரு படி மேலாகக் கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் மன்னர்கட்குத் தாங்களே முடிசூட்டிய பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. இது வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

## சேரனுக்கு முடிசூட்டுதல்

நற்குடி நாற்பத் தெண்ணாயிரம் மரபில் வந்த கொங்கு வேளாளர்கள் அக்கினிகுலச் சேரமான் பெருமாள் மன்னனுக்கு முடி சூட்டினர்.

'நற்குடி நாற்பத்தெண் ணாயிரம் கோத்திர நாட்டவர்கள்
பொற்கிரீ டம்தனைச் சாற்றவந் தார்புவிக் காவலனாம்
அக்கினி கோத்திரன் புகழ்சேர மான்பெரு மாள்தனக்கு
வைக்கவும் வந்திடும் வேளாளர் வாழ்கொங்கு மண்டலமே''

என்பது வாலசுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகப்பாடலாகும் (49).

## இராமப்பய்யனுக்கு முடி சூட்டல்

மதுரை திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யன். அவன் அரசன் அல்ல. கொங்கு நாட்டில் திருமலை நாயக்கருக்காக அதிகாரம் செய்தவன். கொங்கு வேளாளர்களில் பூந்துறை நண்ணாவுடையாரும், வெள்ளோடு உலகுடையாரும், சங்ககிரியில் தளபதி இராமப்பய்ய னுக்கு முடி சூட்டினர்.

''தென்னார் மதுரை சிரீராமப் பய்யர் செழுங்கிரியில்
பொன்மாரி பெய்திடும் பூந்துறை நாடதும் பூவணையும்
ஒன்மானம் ஆகிய நண்ணா வுடையார் உலகுடையார்
மின்னார் கனக முடிசூட்டு வார்கொங்கு மண்டலமே''

என்பது வால சுந்தரக் கவிராயரின் கொங்கு மண்டல சதகப் பாடலாகும் (48).

## சிவனுக்குப் பொன்முடி சூட்டிய வேளாளர்

சிவாலயத்தில் மூவேந்தரும் பெருமக்கள் பலரும் கூடியிருந்தனர். அனைவரும் சிவபெருமானுக்குப் பொன்முடி சூட்ட நீயே தகுதியானவன் என்று அங்கிருந்த வேளாளர் பொன்ன குலத்தாரைக் கேட்டுக் கொண்டனர்.

‘தென்னவர் தேவரும் மூவர் இராசர் சிவன்சபையில்
அன்னவன் நீயென்று அழைத்துவந் தார்செய் அழறகணற்குப்
பொன்ன குலாதிபன் பொன்னையும் வாரிச்செம் பொன்முடிப்பான்
மன்னுயிர் காக்க முடிசூட்டு வோன்கொங்கு மண்டலமே’’

என்பது கொங்கு மண்டல சதகப்பாடல் (வால. 99).

## தசரதராமனுக்கு முடி கொடுத்தோர் கொங்கு வேளாளர்

இராமனுக்கு முடிசூட்ட வசிட்டரிடம் முடி கொடுத்தவர்கள் சடையப்பர் முன்னோர் ஆன கொங்கு வேளாளர்கள் என்று கொங்கு மண்டல சதகம் கூறுகிறது.

‘‘கொங்கேழ் நதியும் சிவகிரி மேவு குவலயமும்
கங்கா நதியும் புகழ்பெறு வாசமும் கற்புநிலை
சிங்கா சனமும் தசரத ராசன்தன் செல்வருக்கு
மங்காக் கனக முடிசூட்டி வாழ்கொங்கு மண்டலமே’’

என்பது சதகப் பாடல். (கம்ப நாத சுவாமிகள்)

‘‘மங்கைஒரு பாகற்கும் மன்னவர்க்கும் மாதவர்க்கும்
துங்கமணி முடியைச் சூட்டும்கை’’

என்று கம்பரின் வேளாளர் திருக்கை வழக்கம் கூறுகிறது.

# 14. கம்பர் பாடலா?

கொங்கு நாடு பற்றிக் கம்பர் இயற்றியதாகக் கருதப்படும் ஒரு பாடல் வழக்கத்தில் உள்ளது. அப்பாடல்,

''நீரெலாம் சேற்று நாற்றம்
நிலமெலாம் கல்லும் முள்ளும்
ஊரெலாம் பட்டி தொட்டி
உண்பதோ கம்பஞ் சோறு
பேரெலாம் பொம்மன் திம்மன்
பெண்களோ நாயும் பேயும்
காருலாம் கொங்கு நாட்டைக்
கனவிலும் கருதொ ணாதே''

என்பதாகும். தனிப்பாடல் திரட்டிலும், மு.இராகவய்யங்கார் தொகுத்த மதுரைத் தமிழ்ச்சங்கப் பெருந்தொகையிலும் இப்பாடல் இடம் பெற்றுள்ளது.

- கொங்கு வேளாளர்கட்கு மங்கல வாழ்த்து, கம்பர் வாழி, ஏரெழுபது, திருக்கை வழக்கம் பாடியளித்த கம்பர்,
- காவிரி கொங்கு நாட்டாரின் எச்சில் என்று நிரூபித்த கம்பர்,
- சோழன் நேரிமலை கொங்கர் போர்ப் பட்டறைக் கல்லுக்குச் சமம் அல்லவென்றும், சோழர் செங்கோல் கொங்கர் கலப்பை மேழிக்குச் சமம் அல்ல என்றும் கூறிய கம்பர்,
- கொங்கு நாட்டாரிடம் நீட்டிய வலக்கையை எவரிடமும் நீட்டேன் என்று சோழனிடம் இடக்கை நீட்டிப் பரிசு பெற்ற கம்பர், இப்பாடலைப் பாடியிருப்பாரா? இது கம்பர் பாடல் அல்ல. எவரோ வம்பர் பாடிய பாடலாகும்.

இனி இப்பாடலின் பொருளைப் பார்க்கலாம்.

இப்பாடலில் ஆறு செய்திகள் கூறப்படுகின்றன. அவை கொங்கு நாட்டு நீர், நிலம், ஊர், உணவு, ஆடவர் பெயர், பெண்கள் ஆகியவை.

கொங்கு நாட்டை ஊடறுத்து நீண்ட தூரம் பயணம் செய்யும் காவிரி கங்கையைவிடத் தூய்மையும், புனிதமும் ஆனது என்று கூறுவர். காவிரியாறு தூய்மையானது என்றால் அதில் சங்கமம் ஆகும் கொங்கு நாட்டு ஆறுகளும் தூய்மையானதாகத்தானே இருக்கும். பவானியாற்று நீர் சந்தன மணம் வீசும் என்றும், நொய்யல் ஆறு 'மணக்கும் திருக்காஞ்சி' என்றும் இலக்கியங்கள் கூறும். கொங்கு ஆறுகளில் பெண்கள் குளிக்கும் போது ஆபரணங்கள் கழன்று ஆற்றில் விழுந்துவிட்டால் கரையேறிப் பார்த்தால் ஆழமான ஆற்றின் அடியில் நகை இருப்பது தெரியுமாம். ஆற்று நீர், கண்ணாடிபோல் தெளிவாக இருந்துள்ளது.

'புனல்பாய் மகளிர் ஆட ஒழிந்த
பொன்செய் பூங்குழை மீமிசைத் தோன்றும்'

என்கிறது இலக்கியம். நீர் நிலைகள் எங்கும் நீர் விளையாட்டு நடக்குமாம். எனவே நீரெலாம் சேற்று நாற்றம் என்பது தவறு.

கொங்கு நாட்டில் காடும் மலையும் அதிகம் தான். இங்குள்ள காடுகளில் ஏர் உழும்போதும், கிழங்கு தோண்டும் போதும், மழை பெய்த அரிப்பிலும் பல நிறமுடைய மணிக்கற்கள் கிடைக்கின்றன. ஒரு நாட்டின் பெயரே 'பொன்கல் ஊர் நாடு' (பொங்கலூர்). நிலத்தைக் காக்கும் வேலியில்தான் இங்கு முள் இருக்கும். காட்டில் முள் இருக்காது. 8 ஆறுகளில் 90 அணைகட்டி சாமை விளையாத இடமெல்லாம் சம்பா விளைவித்தனர். எனவே நிலமெல்லாம் கல்லும் முள்ளும் என்பது தவறு.

கம்பர் காலத்தில் கொங்கு நாட்டில் எந்த ஊருக்கும் பட்டி, தொட்டி என்ற பெயர்கள் இருந்ததில்லை. தமிழ்நாட்டின் பிற பகுதிகளைவிடக் கொங்கு நாட்டில்தான் நல்லூர், மங்கலம் என

முடிகின்ற ஊர்கள் மிக அதிகம். அவை கொடைச்சிறப்பும், சமயச்சிறப்பும் வாய்ந்தவை. தலைய நல்லூர், விசயமங்கலம் போல.

ஒத்தனூர் ஆன பெரும்பழனநல்லூர் - பெருமாநல்லூர்
காசிமுற்றிய நம்பி பேரூர் - நம்பியூர்
உலகவிடங்கம் - ஒலகடம்
கற்றான்காணி - கத்தாங்கண்ணி
எறிச்சில் பொழில் வாய்ச்சி - பொள்ளாச்சி

என்பன சில ஊர்களின் பழம் பெயர்கள்.

கம்பஞ்சோறு சாப்பிடுவது மதிப்புக் குறைவானது அல்ல. கொங்கு நாட்டில் கோயில் பூசையில் நைவேத்தியமாகப் படைக்கக் கம்பு கொடையாகக் கொடுக்கப்பட்டதைக் கொங்குக் கல்வெட்டுகள் கூறுகின்றன. கம்பருக்குக் கொங்கு வேளாண் பெருமக்கள் கொடுத்த கொடையே கம்பு தான்.

'ஏருக்கு ஒருவள்ளக் கம்பும், நாழிக்கம்பு ஒரு வள்ளமும்,
பேருவைச்சாட்டில் ஒருசாடு கம்பும் கொங்கு
முரத்தால் ஒரு முரக்கம்பும்''

கம்பருக்குக் கொடுத்ததாக ஆவணம் கூறுகிறது.

கம்பர் கொங்கு நாட்டிலிருந்து மீண்டும் சோழநாடு செல்லும் போது கம்பை மூட்டையாகக் கட்டிக் கொண்டு போயுள்ளார்.

''கொங்கு வேளாளரின் கொம்மைக் கம்புக்கு
ஏழாயிரம் மதிப்புடைய பொன்னாடை இணை அல்ல''

என்று கம்பர் கூறுகிறார். இப்படிக் கம்பு சாப்பிட்டாலும் கொங்கர் வீட்டு விருந்து மிகச்சிறப்பானது.

கொடுமணல் கந்தசாமிக் கவுண்டர் மனைவி முத்து வேலம்மாள் அளித்த விருந்தை இலக்கியம் கூறுகிறது.

''சுகமான பூமாது துலங்குமுத்து வேலம்மாள்
அகலமாய்க் கதலியிலை அனைவருக்கும் தான்போட்டு

நிரைநிரையாய்ப் பந்திதனில் நீரெடுத்துப் பரிமாறிக்
திரைகடல்சம் பாய்விரித்துச் சிறப்பாய்ப் பரிமாறி

பூறுவத்தி லுள்ள புதுமை குறையாமல்
ஊறுகாய் பத்துவகை உண்மையுடன் பரிமாறி

ஈற்குஞ்சம் பாவமுதும் இனியதுவ ரைப்பருப்பும்
ஏற்கையுட னெல்லோர்க்கும் இதமாய்ப் பரிமாறி

முள்ளங்கி நற்கிழங்கும் மிதிபாகல் வெண்பாகல்
எல்லவரும் கொண்டாடும் இயல்பான கத்தரிக்காய்

கரிக்கொம்பு கதலிக்காய் கறணைக் கிழங்குடனே
பொரிக்கரிக்கு மேலான பூவன்கத லிக்காயும்

சக்கரைவள் ளிக்கிழங்கும் சாம்பிராணிக் கதலிக்காய்
அக்கரையாய்த் தானருந்தும் அவரைக்காய் தன்னுடனே

மாங்காய்க் குழம்பு மணக்கும் பிலாக்காயும்
தேங்காய் மிகக்கவரும் திரமான பச்சடியும்

கொடிக்காய் வழுதலங்காய் கொத்தவரைக் காயுடனே
பொடித்தூவி யேசமைக்கும் புடலங்காய் தன்னுடனே

கருவேப் பிலைத்துவையல் கருதிய நற்குழம்பும்
மருவேப்பன் பூவடகம் வாசமுள்ள அப்பளமும்

சீடையுடன் கச்சாயம் தேன்குழலும் அதிரசமும்
பேடையன்ன மாமயிலாள் பின்னும் வகைவகையாய்

கதிப்பான தோசைவடை கற்கண்டுஞ் சக்கரையும்
மதிப்பான முக்கனியும் மகிழ்ந்து பரிமாறி

பொன்னனைய கொப்பரையில் புத்துருக்கு நெய்யெடுத்து
தன்னமையா யெல்லோர்க்குத் தாராள மாய்ச்சொரிந்து

அவரவர்கள் தங்களுக்கு அழகுசெம்பு தானெடுத்து
துவரை மிளகிநீர் தோராய மாய்க்கொடுத்து

ஆச்சரிய மான ஆவமுர்தம் தான்கொடுத்துத்

தாட்சிவா ராமல் தயவாய் அமுதருந்தி''

என்று கொடுமணல் இலக்கியம் கந்தசாமி காதல் கூறுகிறது.

பொம்மன் திம்மன் என்ற பெயர்கள் விசயநகரரார், நாயக்கர் ஆட்சிக்குப் பின் கொங்கு நாட்டில் குடியேறிய அயலவர் பெயர்கள். கொங்கு மக்கள் பெயர்கள் அல்ல.

கொங்கு மக்கள் உடையாண்டான், ஆண்ட பெருமாள், பொய்யாத் தமிழ் நம்பி, நீலன் சிலம்பன், உலகப்பன் என்ற பெயர்கள் வைத்துக்கொண்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. பழனி, செங்கோடு, சென்னிமலை, சிவன்மலை, மருதாசலம், கைத்தமலை என்ற கொங்குநாட்டு மலைத்தலப் பெயர்கள் வைத்துக்கொள்வர். அவினாசி, வாரணவாசி, சிதம்பரம் என்ற தலப் பெயர்களையும் காணலாம். பேரனுக்குத் தாத்தாவின் பெயர் வைப்பர். தாத்தாவின் பெயரை உடையவன்தான் பெயரன் - பேரன்.

மானேந்திய கையன், பொன்னம்பலம், மன்றுள் ஆடி, அம்பலத்தாடி, அம்மையப்பன் என சமயம் தொடர்பான பெயர் வைப்பர். பலர் அரசுப் பட்டம் பெற்று அதிசயசோழன் அரசன், முடிகொண்ட சோழமாராயன், தென்னவன் மூவேந்த வேளான், வீரசோழக் காமிண்டன், செயங்கொண்ட சோழக் காமிண்டன் என்ற பெயர் பெற்றனர். குலதெய்வப் பெயரும் வைப்பர். பொம்மன், திம்மன் என்ற பெயரில் எவரும் அறியப்படவில்லை.

இல்லப் பெண்களை மனைக்கிழத்தி என்று பாராட்டினர். சின்னம்மாள், பெரியம்மாள், வள்ளியம்மாள், தெய்வானையம்மாள், பொங்கியம்மாள், செல்லம்மாள் என அம்மாள் என்ற பெயர் வைத்துப் பெண்களை அம்மையாகப் பாவிப்பார்கள்.

கொங்கு இல்ல நிகழ்ச்சிக்கு நாட்டியம் ஆடவரும் பெண்களே தேவலோக மங்கையர்கள் போல இருப்பார்களாம்.

'அரம்பை மேனகை அணிமிகு திலோத்தமை
திரம்பெறும் ஊர்வசி தெரிவையர்க்கு ஒப்பாய்
வண்மைசேர் கூத்தி வகைபெற நின்று
நன்மைசேர் பரத நாட்டியம் ஆடிட''

என்று மங்கல வாழ்த்துக் கூறுகிறது. கொங்குப் பெண்களை 'நாயும் பேயும்' என்பது மிகவும் தவறான கூற்று. எனவே இத்தகு தவறான பாடலை கம்பர் உறுதியாகப் பாடியிருக்க மாட்டார்.

# 15. மீண்டும் சோழநாட்டில் கம்பர்

கொங்கு நாடு வந்து வேளாளர்களால் சிறப்பிக்கப்பட்ட கம்பர் மீண்டும் சோழநாடு சென்றார். அதற்குக் காரணம் சடையப்ப வள்ளலின் தம்பி இணையாரமார்பன் வந்து அழைத்ததேயாகும்.

சோழநாடு செல்லும் போது தன் ஓலை எழுதும் கையேட்டுக் காரர் சிலரைக் கொங்கு நாட்டிலேயே விட்டுவிட்டுச் செல்ல, அவர்களும் அவர்கள் சந்ததியார்களும் கொங்குப் புலவர்களாக ஆனார்கள் என்பர்.

கம்பருக்குக் கொங்கு நாட்டில் ''ராசிக்களத்தில் ஏருக்கு ஒரு வள்ளக்கம்பும் பேருவைச் சாட்டில் ஒரு சாடு கம்பும் கொங்கு முரத்தால் ஒரு முரக் கம்பும்' கெடுப்பார்களாம்.

சோழநாடு செல்லும்போது சோழன் கொடுத்த ஏழாயிரம் பொன் மதிப்புடைய பொன்னாடையில் கொங்கு நாட்டுக் கம்பை மூட்டையாக எடுத்துக்கொண்டு சென்றார். அதை அறிந்த சோழன் விலைமதிப்பு மிக்க பொன்னாடையில் கொம்மைக் கம்பைக் கட்டலாமா என்று கேட்க இந்தப் பொன்னாடை கொங்கு வேளாண் பெருமக்கள் கொடுத்த கம்புக்கு இணையல்ல என்றார்.

கம்பர் சோழநாடு வந்தும் சோழனைச் சந்தித்த போதும் சோழனைப் பாடவில்லை. சில நாட்கள் பாடாமல் இருக்க சோழனே பாடுமாறு கேட்க கம்பர் எதைப் பற்றிப் பாடுவது என்றார்.

சோழன் என் நேரிமலையைப் பாடுங்கள் என்றார். கம்பர் உங்கள் நேரிமலை கொங்கு மக்கள் வைக்கோல் போர்ப்பட்டறைக்கு வைக்கும் கல்லுக்குச் சமம் அல்ல என்றார்.

சோழன் தன் செங்கோலைப் பாடுமாறு கேட்க உங்கள் செங்கோல் கொங்கு மக்கள் உழும் கலப்பையின் கைப்பிடிக்குச் சமம் அல்ல என்றார்.

சோழன் எனது ஆறாகிய காவிரியைப் பாடுங்கள் என்று கேட்க கம்பர் உங்கள் காவிரி கொங்கு நாட்டாரின் எச்சில்தானே என்றார். சோழன் நிரூபிக்க முடியுமா என்று கேட்க குளித்தலைக்குச் சோழனை அழைத்து வந்து காட்ட கொங்கு நாட்டார் விருந்துண்டு போட்ட எச்சில் இலைகள் மிதந்து வந்ததைச் சோழனுக்குக் காட்டினார்.

சோழன் தன் அரண்மனையில் உள்ள பொன், நவமணிகள் இவைகளை வேண்டிய மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள் என்றார். கம்பர் கொங்கு வேளாளரின் இராசிக் களத்தில் கொடுத்த ஒரு கூடை கம்புக்குச் சமம் அல்ல இவை என்றார்.

என்னைவிட வேளாளர்கள் பெரியவர்களா என்று கேட்க ஆம் என்ற கம்பர் ஒரு வேளாளச் சிறுவனுக்குப் பொலி மந்திரம் சொல்லிக் கொடுத்துத் தராசில் நிறுக்க சோழனை விட வேளாளச் சிறுவன் எடை அதிகமாக இருந்தானாம்.

பாடாவிட்டாலும் சோழன் கம்பருக்குப் பொன் கொடுத்தான். கம்பர் வழக்கத்திற்கு மாறாகத் தன் இடது கையை நீட்டிப் பரிசு பெற்றார். அதிர்ச்சி அடைந்த சோழன் காரணம் கேட்க கம்பர் கொங்கு நாட்டு வேளாளரிடம் நீட்டிய வலக்கையை வேறு எவரிடமும் நீட்ட மாட்டேன் என்றார்.

இறுதியாகச் சோழன் என்னையாவது பாடுங்கள் என்று கேட்க கொங்கு வேளாளரைப் பாடிய வாயால் உங்களைப் பாடமாட்டேன் என்றார்.

கடுங்கோபம் கொண்ட சோழன் ஒரு நாள் கம்பர் வரும்போது புலியைத் திறந்துவிடப் புலியை எய்வது போல் சோழன் அம்பெய்து கம்பரைக் கொன்றாராம். இதை நம்ப வைக்குமாறு பாடல்களும் பாடிவைத்து விட்டனர். கொங்கு ஆவணமும்,

'சோழன் வருமங்கொண்டிருந்து சூதானத்துனாலே
அம்புகொண்டெய்து போட்டார். சோழ ராசாவின்
கையம்பினாலே கம்பர் இறந்து போனார்,

என்று கூறுகிறது.

இதைக் குறிக்கும் பல தனிப்பாடல்களும் உள்ளன. அப்பாடல்கள் தமிழ் நாவலர் சரிதை, விநோதரச மஞ்சரி, பெருந்தொகை முதலிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. மு. இராகவய்யங்கார் போன்ற பெரும் புலவர்கள் இச்சம்பவம் குறித்து எழுதியுள்ளனர். இருப்பினும் இது ஆய்வுக்குரியது.

# 16. சடையப்ப வள்ளல்

கம்பருக்குச் சடையப்பர் செய்த உதவி அளப்பரிது. சோழ மண்டல சதகம்,

'பெற்று வளர்த்தும் வித்தைதனைப்
பேணிக் கொடுத்தும் பெயர்கொடுத்தும்
பற்ற அரும்பால் அமுதளித்தும்
பகைத்த வறுமைப் பயம்தீர்த்தும்
கற்ற முதல்நூல் திருவழுந்தூர்க்
கம்பன் தழையக் கருணைசெய்தோர்'

சடையப்பர் என்று கூறுகிறது. அதனால்தான் காளிதேவி அருள்பெற்றுக் கம்பர் பாடிய முதல்பாடல்,

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் என்றெண்ணி
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணையே - நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சரராமன் ஊர்

என்பது. கம்பரது இறுதிப்பாடலாகக் கூறப்படுவதும் சடையப்பர் பற்றியதே. அப்பாடல்,

'ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம் - தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையா கம்பன்
இறக்கும்போ தேனும் இனி'

என்பதாகும்.

சடையப்பர், காராளர், கங்கைமரபு என்பதால் அவர் வேளாளர் என்பது உறுதி. அதுவும் கொங்கு வேளாளர் மரபில் சாத்தந்தை

குலத்தைச் சேர்ந்தவர் என்கிறார் கொங்கு மண்டல சதகம் பாடிய வாலசுந்தரக் கவிஞர். (65)

'சாத்தந்தை கோத்திரன் பண்ணை குலேந்திரன்
தமிழ்ச்சடையன்'

என்பது அவர் வாக்கு. பண்ணை குலேந்திரன்' என்பதற்கு பதிப்பாசிரியர் புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் கி.பி. 1151 ஆம் ஆண்டு வேளாளர் சாத்தந்தை குல பண்ணைய அதிபதி வெண்ணை நல்லூர் சடையன் உதவிய பொருட்கொடையால் தான் அவர் கொங்கு மண்டல சதகம் இயற்றியதாகக் கூறுகிறார்.

'படிக்கவே பொருட்சாத் தந்தை
பண்ணைகோன் வெண்ணெய் நல்லூர்
கொடுத்திடும் இரணம் வாரிக்
கொங்குசெய் சதகம் தானே' (3)

கம்பர் வேளாளர் சாத்தந்தைகுலச் சடையப்பர் வேண்டிக் கொள்ளவே இராமாயணம் பாடினார் என்கிறார். கொங்கு மண்டல சதக ஆசிரியர் (66)

'பண்ணை குலாதிபன் கம்பர்செய்
ராமர் பனுவலதை'

என்பது அவர் கூற்று.

சதகப்பாடல் தனிப்பாடல் படி சடையப்பர் வெண்ணை நல்லூரினராக இருந்தாலும் புதுவை என்ற ஊருக்கும் உடையவராக இருந்தார். இது புதுச்சேரி அல்ல. திருவாரூர் அருகில் உள்ள ஊர். அவர் தந்தை பெயர் சங்கரன். சடையப்பருக்கு இணையாரா மார்பன் என்ற தம்பி உண்டு. மக்கள் பிள்ளைப்பெருமாள், சேதிராயன்.

பெரும் உழவராகவும், கடல் வணிகராகவும் இருந்த சடையப்பர் ஒருமுறை சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தருக்கும் விருந்தளித்தாராம். மூவேந்தர்கள் மனமகிழ்ந்து சடையப்பருக்குத் 'திரிகர்த்தராயன்' என்று பெயர் கொடுத்தார்களாம். சோழ மண்டல சதகம்,

"அளிக்கும் படைமூ வேந்தரும்கொண்
டாடும் விருந்தால் அதிசயமாய்த்
திளைக்கும் திரிகர்த்த ராயன்எனச்
செப்பும் வரிசைத் திறம்சேர்ந்தோன்"

என்று பாராட்டுகிறது.

ஒரு சமயம் இலங்கை கண்டிப் பகுதியில் பெரும்பஞ்சம் ஏற்பட்டது. கண்டி மன்னன் பரராசசிங்கன் வேண்டுகோள்படி சடையப்பர் ஆயிரம் கப்பல்களில் நெல் அனுப்பி கண்டிப் பஞ்சத்தைப் போக்கினாராம். சோழமண்டல சதகம்,

"தேனார் தொடையார் பரராச
சிங்கப் பெருமான் செந்தமிழ்க்குக்
கானார் நெல்லின் மலைகோடி
கண்டி நாடு கரைசேரக்
கூனார் கப்பல் ஆயிரத்தில்
கொடுபோய் அளித்த கொடைத்தடக்கை
மானா கரன்சங் கரன்சடையன்"

என்று பாராட்டுகிறது.

இதற்காகப் பரராசிங்கன் சடையப்பரைப் புகழ்ந்து ஒரு பாடல் பாடியுள்ளார். அப்பாடல்

"இரவு நண்பகல் ஆகில் என்பகல்
இருள்அ றாஇரவு ஆகில்என்
இரவி எண்திசை மாறில் என்கடல்
ஏழும் ஏறில்என் வற்றில்என்

மரபு தங்கிய முறைமை பேணிய
மன்னர் போகில்என் ஆகில்என்
வளமை இன்புறு சோழ மண்டல
வாழ்க்கை காரண மாகவே

கருது செம்பொனின் அம்ப லத்தில்ஒரு
கடவுள் நின்று நடிக்குமே
காவி ரித்திரு நதியி லேஒரு
கருணை மாமுகில் துயிலுமே

தருஉ யர்ந்திரு புதுவை யம்பதி
தங்கு மானிய சேகரன்
சங்க ரன்தரு சடையன் என்றொரு
தரும தேவதை வாழ்வதே

என்பது அவர் பாடலாகும்.

நாட்டைக் காப்பாற்றும் சடையப்பர் இருக்கிறார் என எண்ணியே கவலையற்று சிதம்பரத்தில் நடராசர் நடனமாடிக் கொண்டும் திருவரங்கத்தில் திருமால் படுத்து உறங்கிக் கொண்டும் இருக்கிறார்களாம்.

சித்தப்பிரமை ஏற்பட்ட கரிகால்சோழன் குறத்தியாக வந்து காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூற்றுப்படி கொங்கு நாட்டில் 36 இடங்களில் காடழித்து நாடாக்கி கோயிலும் ஊரும் ஏற்படுத்துகிறார். அவ்வூரில் உழவுத் தொழில் செய்ய கரிகாலன் ஏவல்படி சடையப்பவள்ளல் வேளாளர்களை நியமிக்கிறார். ஊர்களும் வேளாளர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இவை சோழன் பூர்வ பட்டயத்தில் உள்ளன.

| | |
|---|---|
| கரூர் | குப்பண்ணன் |
| கொடுமுடி | கந்தப்பன் |
| வெஞ்சமாங்கூடல் | செல்லப்பன் |
| பவானி | செல்லப்பன் |
| பழனி | நல்லியப்பன் |
| ஆய்க்குடி | நாச்சியப்பன் |
| பூம்பறை | மாந்தப்பன் |
| ஆனைமலை | காளியப்பன் |
| செஞ்சேரி | பெரியநம்பி |

| | |
|---|---|
| சென்னிமலை | நல்லதம்பி |
| வெள்ளியம்பதி | சின்னப்பன் |
| சத்தியமங்கலம் | வாரணவாசி |
| திங்களூர் | மாந்தப்பன் |
| விசயமங்கலம் | பெரியண்ணன் |
| கீரனூர் | தேவணன் |
| கோனாபுரி | சின்னய்யன் |
| நடுவச்சேரி | குமாரவேலப்பன் |
| பல்லடம் | பழனியப்பன் |
| தணக்கன்கோட்டை | சென்னிமலை |
| குள்ளந்துறை | செம்மன் |
| வண்டிக்கோட்டை | சோழி |
| வெள்ளாதி | பச்சையப்பன் |
| கோயில்பாளையம் | அப்பன் |
| சாமளாபுரம் | கந்தப்பன் |
| சிங்கநல்லூர் | சின்னய்யன் |
| வெள்ளலூர் | நல்லதம்பி |
| சூலூர் | வேலப்பன் |
| இருகூர் | பெரியதம்பி |
| இடிகரை | தேவியண்ணன் |
| துடியலூர் | கொண்டப்பயன் |
| கோயம்புத்தூர் | பச்சையப்பன் |
| பேரூர் | குப்பயண்ணன் |
| அவினாசி | சோழியப்பன் |
| சேவூர் | பெரியசோழியப்பன் |
| அன்னூர் | பெருமாள் |
| முட்டம் | நல்லண்ணன் |

தன்னை ஆதரித்து வளர்த்துப் புலமை பெறச்செய்த சடையப்பர் மீதும், அவர் ஊராகிய வெண்ணை நல்லூர் மீதும், சடையப்பர் சார்ந்த வேளாளர்கள் மீதும் கம்பர் பெரிதும் அன்பு காட்டினார். பற்றும் பாசமும் கொண்டு விளங்கினார்.

ஒரு சமயம் பாண்டிய நாட்டுக்குக் கம்பர் பயணம் செய்தார். மதுரையை அலங்கரித்த பாண்டியன் மதுரை நகர் பற்றிய கருத்துக் கேட்டானாம். கம்பர் இது திருவெண்ணைநல்லூர் சுடுகாடு போல உள்ளது என்றாராம். இதனை,

''விள்ளும் மதுரை அலங்கரித்த
வீம்பு நோக்கி வெண்ணைநல்லூர்
உள்ளும் இடுகாடு ஒக்கும்என
உரைத்தார் கம்பர்''

என்று சோழமண்டல சதகம் கூறுகிறது.

ஒருமுறை காவிரிக்கரையில் மூவேந்தர்கள் கூடியிருந்தனர். கம்பரும் அங்கு இருந்தார். சோழன் தன் காவிரியின் பெருமையைப் பல படப் பாராட்டினார். அப்போது கம்பர் சடையப்பர் சார்ந்த வேளாளர்கள் விருந்துண்டு கைகழுவும் எச்சில் நீர் தான் காவிரி என்றாராம். அப்போது கம்பர்,

'மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவும் நீர்போகும் காவிரியே - பொய்கழுவும்
போர்வேற் சடையன் புகழ்மர பினோர்பெருமை
யார்போற்ற வல்லார் அறிந்து''

என்று பாடினாராம்.

இத்தகு பெருமை வாய்ந்த சடையப்பர் பெயரை தான் பாடிய இராமாயணத்தில் நூறு பாடல்கட்கு ஒருமுறை கூறியிருந்தாராம். திருவரங்கம் அந்தணர்கள் ஆயிரம் பாடல்கட்கு ஒருமுறை கூறச் சொன்னார்களாம்.

உடனே கம்பர் 'ஆம் சடையப்பர் நூற்றில் ஒருவர் அல்ல ஆயிரத்தில் ஒருவரே' என்று கூறித் தான் பாடிய இராம காதையில் 10 இடங்களில் சடையப்பரைக் குறிப்பிட்டுப் பாடினாராம்.

இதனை சோழமண்டல சதகம்,

எண்ணத் தகும்பார் உள்ளளவும்
இரவி மதியம் எழும்அளவும்
கண்ணற்கு இனிய சயராம
கதையில் ஒருபான் கவியமுதம்
வெண்ணெய்ச் சடையன் சடையன்என
விறலார் கம்பன் விளங்கவைத்த
வண்ணத் துறைவே ளாண்பெருமை''

என்று கூறுகிறது.

கீழ்வரும் கம்பராமாயணப் பாடல்களில் சடையப்ப வள்ளல் பெயர் குறிப்பிடப்பெறுகிறது.

(அ) இராமாவதாரம் என்னும் இக் குற்றம் இல்லாத பெரிய காதை சடையப்ப வள்ளலின் திருவெண்ணெய் நல்லூரில் இயற்றப்பட்டது.

''நடையின் நின்றுயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்தரா மாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோம்அறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே''

(பாயிரம் 11)

(ஆ) வேள்வியின் போது அதைக் காப்பவர்கட்கு அளிக்கப் பெற்ற ஆயுதங்கள் தப்பாமல் பாய்ந்து பகைவர்களை அழிக்க வல்லது. உலகினர் வறுமை நோயைத் தீர்க்கும் சடையனின் சொல்லாகிய மருந்து தப்பாமல் பசிப்பிணி நீக்குவது போல அந்த ஆயுதங்களும் தப்பாமல் பகையை அழிக்கும்.

''விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனும் கானம் நீங்கித் தாங்கரும் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்துஅன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே போலப் படைக்கலம் அருளினானே''

(பால. வேள்விப்படலம் 1)

(இ) உலகத்தில் உள்ள இருளையெல்லாம் உண்ணும் பொருட்டு நிலா எழுந்தது. விண்ணும் மண்ணும் எல்லாத் திசைகளிலும் நிலவொளி பரவியிருந்தது. அது சடையன் புகழ் எல்லா இடங்களிலும் பரவியிருப்பதுபோல் காணப்பட்டது.

''வண்ண மாலை கைபரப்பி உலகை வளைத்த இருள்எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்து உதயத்து எழுந்த நிலாக்கற்றை
விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநல்நீர்ப்
பண்ணை வெண்ணைச் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரந்துளதால்''

(மிதிலைக் காட்சிப் படலம்)

(ஈ) புலவர்களை வாழச் செய்யும் வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துப் பெற்ற புலவர்கள் தங்கள் வாழ்வு உயர்வடைவார்கள்.

''வாழ்வார்தரு வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பன் வாழ்த்துப்பெற
தாழ்வார் உயர புலவோர் அகஇருள் தான்அகல
போழ்வார் கதிரின்உதித்த தெய்வப்புலமைக் கம்பநாட்டு
ஆழ்வார் பதத்தை சிந்திப்பவர்க்கு யாதும் அரியது அன்றே''

பாலகாண்டம். மிகைப்பாடல் 17

(உ) சாலிவாகன சகம் 807 ஆம் ஆண்டு (கி.பி. 885) பங்குனி மாதம் அத்த நட்சத்திரத்தில் சடையன் வாழும் வெண்ணெய் நல்லூரிலே பாடிய கம்பராமாயணம் திருவரங்கத்தில் அரங்கேறியது.

''எண்ணிய சகாத்தம் எண்ணூற்று ஏழின்மேல் சடையன்வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே கம்பநாடன்
பண்ணிய இராம காதை பங்குனி அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவிஅரங் கேற்றி னானே''

(பாலகாண்டம் - மிகைப்பாடல் 23)

(ஊ) சீதையைச் சிறைமீட்க இராமன் சேது அணை கட்டினான். பெரிய குரங்குகள் மலைகளை எடுத்து வீசின. சேதுபந்தனம் கட்டும் நளன் அம்மலைகளை வியப்புறும் வண்ணம் தாங்கிக் கொண்டான். அச்செயல் தஞ்சம் என்று வந்தவர்களைச் சடையப்ப வள்ளல்

வெண்ணெய் நல்லூரில் அடைக்கலம் தந்து தாங்கும் காட்சி போல் இருந்தது.

''மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்கு
எஞ்சுறக் கடிதுஎடுத்து எறிய வேநளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்''

(சேதுபந்தனப் படலம் 9)

(எ) நாகபாசமானது கொடைத் தன்மையில் சிறந்த வெண்ணெய் நல்லூர்ச் சடையனை அணுகுவோர் பசி விரைந்து அகல்வது போல வில்லிருந்து புறப்பட்டுச் சென்றது.

''வாசங் கலந்த மரைநாள நூலின்
வகையென்ப தென்னை மழையென்
றாசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்
நேசங் கலந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாளர் என்றிம் முதலோர்
பாசங் கலந்த பசிபோல் அகன்ற
பதகன் துரந்த உரகம்''

(நாகபாசப் படலம் 263)

(ஏ) இராமனை நோக்கி அந்தணர், வணிகர், வேளாண் மரபைச் சேர்ந்தவர்கள் பல சான்றோர்கள் அடைக்கலம் புகுந்தார்கள். அவர்கள் ஆலி நாட்டுச் சடையப்பன் போன்ற சான்றோர் ஆவர்.

''அந்தணர் வணிகர் வேளாண் மரபினோர் ஆலி நாட்டுச்
சந்துஅணி புயத்து வள்ளல் சடையனே அனைய சான்றோர்
உய்ந்தனம் அடியம் என்னும் உவகையின் உவரி நாண
வந்தனர் இராமன் கோயில் மங்களத்து உரிமை மாக்கள்''

(யுத்த காண்டம் 32-1)

(ஐ) நூலின் இறுதியில் வாழ்த்துக் கூறும்போது மறையவர், மனுநெறி, அரசர், மழை, இராமன் கதை கேட்டோர், அனுமன் ஆகியோருக்குக் கூறுபவர் சடையப்பருக்கும் வாழ்த்துக் கூறுகின்றார்.

''மறையவர் வாழி வேத மனுநெறி வாழி நன்னூல்
முறைசெயும் அரசர் திங்கள் மும்மழை வாழி மெய்ம்மை
இறையவன் இராமன் வாழி இக்கதை கேட்போர் வாழி
அறைபுகழ்ச் சடையன் வாழி அரும்புகழ் அனுமன் வாழி''

(யுத்த காண்டம் விடை கொடுத்த படலம் 42-1)

(ஒ) அகலிகைப் படலப்பாடல்

அரம டந்தையர் கற்பகம் நவநிதி அமிர்தம்
சுரபி வாம்பரி மதமலை முதலிய தொடக்கத்து
ஒருபெ ரும்பொருள் இன்றியே உவரிபுக் கொளிப்ப
வெருவி ஓடின கண்ணன்வாழ் வெண்ணெய் மேவாரின்.

# 17. கொங்கு நாட்டில் சார்பு நூலும் எதிர்நூலும்

'பொத்தகம்' என்ற பெயர் தான் இன்று 'புத்தகம்' என மருவி வழங்குகிறது. புத்தகத்தை 'நூல்' என்று வழங்குகிறோம். 'நூல் நிலையம்' என்கிறோம். நூல் நிலையத்தை முன்னோர் 'சரஸ்வதி பண்டாரம்' என்றனர்.

புத்தகத்தை நூல் என்று வழங்குவதற்குரிய காரணத்தை நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் கூறுகிறார். அவர் பெருந்துறை வட்டம் சீனாபுரத்தில் கி.பி.12ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். சமண சமயத்தவர். விசய மங்கலத் தமிழ்ச் சங்கத்தில் நன்னூலை அரங்கேற்றம் செய்தார்.

கோணலாக உள்ள மரத்தில் நேரான பகுதியைப் பெற மரத்தச்சர்கள் சிறிய அளவில் சாயமேற்றப்பட்ட நூலால் அடையாள மிட்டு அறுத்தெடுப்பர். மரத்தின் கோட்டம் (வளைவு) போய்விடும். அதுபோல் மக்களின் மனக் கோட்டம் தீர்க்கப் புத்தகம் பயன்படுவதால் புத்தகத்திற்கு நூல் என்ற பெயர் வந்ததாகப் பவணந்தி முனிவர் கூறுகிறார்.

அப்படிப்பட்ட நூல் மூன்று வகைப்படும் என்று பவணந்தி முனிவர் கூறுகிறார். அவர் நூற்பா,

'முதல் வழி சார்பு என நூல் மூன்றாகும்'

என்பதாகும். சில உரையாசிரியர்கள் 'எதிர்நூல்' என்பதும் ஒன்றுண்டு என்று கூறுகின்றனர். கொங்கு நாட்டில் கம்பருக்கு சார்பு நூலும், எதிர் நூலும் தோன்றியது.

### சார்பு நூல்

நாரத முனிவரால் இராமசரித்திரம் கேட்ட வால்மீகி எழுதிய ராமாயணம் முதல் நூல். அம்முதல் நூலைப் பின்பற்றிக் கம்பர் எழுதிய

இராமாயணம் வழி நூல். கம்பரின் இராமாயணத்தை எளிமைப்படுத்தி யாவரும் புரிந்து கொள்ள கொங்கு மண்டல பத்தர்பாடி எம்பெருமான் கவிராயர் இயற்றிய 'தக்கை இராமாயணம்' சார்பு நூல்.

இந்நூலைப் பாடுவித்தவர் மோரூர் நல்லதம்பிக் காங்கேயன்.

'அம்புவி மெச்சுகுன் றத்தூரில் ஆயரில் ஆய்கலைதேர்
எம்பெரு மானைக் கொடுதக்கை என்னும் இசைத்தமிழில்
நம்பும் இராம கதையைஅன் பாக நவிலஇசை
வம்பவிர் தார்புயன் நல்லய்ய னும்கொங்கு மண்டலமே''

என்பது சதகப் பாடலாகும்.

இதை தக்கைராமாயணப் பாடலும்,

'மெத்தவே கண்ணன் வெண்ணெய்தனில்
விருத்தச் சீரா மாயணத்தை
சுத்தநாக் கம்பன் நாடன்சொன்னான்
சொன்ன பொருள்தக்கை இசையாலே
பத்தர் பாடிஎம் பெருமானார்
பகரும் படிசெய்தான் மோரூரான்
அர்த்த நாரிசொல் நல்லதம்பி
அமலன் அருள்பெற்று வாழ்வாரே''

என்று கூறுகிறது.

எம்பெருமான் கவிராயர் கம்பரை ஆதரித்த சடைப்ப வள்ளலுக்கும், தம்மை ஆதரித்து தக்கை இராமாயணம் பாடுவித்த அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயனுக்கும் உள்ள சில ஒற்றுமையைக் கூறுகிறார்.

'அவனும் சடையன் காராளன்
அவன்தன் ஊரும் வெண்ணெய் நல்லூர்
இவனும் நல்லதம்பிக் காங்கேயன்
இவன்தன் ஊரும் மோரூராம்

அவனும் கண்ணன் சரராமன்
ஆகவராமன் இவனும் கண்ணன்
இவனும் அவனைப்போல் உலகுதனில்
இராம கதைதனைப் பாடுவித்தான்'

**ஒற்றுமை**

| சடையன் | நல்லதம்பி |
|---|---|
| காராளன் | காங்கேயன் (கங்கை குலத்தான்) |
| சரராமன் | ஆகவராமன் |
| கண்ணன் (பெயர்) | கண்ணன் (குலம்) |
| வெண்ணெய் நல்லூர் | மோரூர் |

தக்கை என்பது இருமுகத் தோல் கருவி. திருக்கோயில் வழிபாடு நடைபெறும் போது வலப்பக்கத்தில் சிறுதடி கொண்டு அடித்து முழக்கப்படுவது. சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தக்கையை அகப்புற முழவு என்று கூறுகிறார். இன்றும் தாழ்ந்த குரலிசையில் பாடும் ஒருவனைத் தக்கு சுருதியிலே பாடுகிறான் என்று கூறும் வழக்கம் உண்டு. தாழ்ந்த ஒலியை உடையதால் தக்கை எனப் பட்டது போலும். இப்போது அருகிவிட்ட தக்கை திருவரங்கக்கோயிலில் வாசிக்கப்படுகிறது. உடுக்கையை விடப் பெரிதாக இருக்கும். 'சச்சரி கொக்களி தக்கை' என்று காரைக்காலம்மையாரும், 'கத்திரிகை துத்தரி கறங்குதுடி தக்கையொடு இடக்கை பாடகம்' என்று திருஞானசம்பந்தரும், 'தக்கை தண்ணுமை தாளம் வீணை தகுளிச்சம் கிணை சல்லரி' என்று சுந்தரரும் இசைக் கருவிப் பெயர்களைப் பட்டியலிடுகின்றனர். திருநாவுக்கரசர் சிவபெருமானை வருணிக்குமிடத்தில் 'தக்கையொடு தாளம் இறங்கக் கண்டேன்' என்று கூறுவார். கம்பரும் 'கும்பிகை தமிலை' எனத் தொடங்கும் பாடலில் தக்கையைக் குறிப்பிடுகிறார். கந்தபுராணத்திலும், திருவிளையாடல் புராணத்திலும் தக்கை வாத்தியம் குறிக்கப் பெறுகிறது. உடுக்கை இசையில் பாடப்படும் பாடல் உடுக்கைப் பாட்டு என்று கூறுவது போலத் தக்கை இசையில் பாடப்பட்ட இசை ராமாயணம் தக்கை ராமாயணம் எனப்பட்டது.

புகழ் பெற்ற கம்பர் விருத்தப் பாடலால் இயற்றிய இராமாயணத்தை எளிய தமிழறிவுடையாரும் கற்றுணரும் இராமாயணமாக நமக்கு அளித்தவர் பத்தர்பாடி எம்பெருமான் கவிராயர். கொங்கு நாட்டில் அன்று வழக்கில் இருந்த தக்கை இசையிலே கம்பரின் நயம் குறையாமல் சில இடங்களில் கம்பரை விஞ்சும் வகையில் தக்கை இராமாயணம் அமைந்துள்ளது. தக்கைக்கு உரிய கொச்சகம் கலிப் பாவில் ஒற்றை, இரட்டை, பாடகம் என்ற வரிப்பாடல்களில் தக்கை இராமாயணம் அமைந்துள்ளது. நாற்சீரடியால் ஒற்றை, அறுசீர் அடியால் இரட்டை வரிப்பாடல்கள் அமைந்துள்ளன.

மோரூர்க் கண்ணகுல நல்லம்பிக் காங்கேயன் (1599-1619) வேண்டிக் கொள்ள எம்பெருமான் கவிராயர் இந்நூலைச் சங்ககிரியில் இயற்றி அரங்கேற்றினார். இக்காங்கேயர் தம் தாத்தா, தந்தை பெயர் இணைப்புடன் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் என்று அழைக்கப் பெறுவர்.

இந்நூல் ஆறு காண்டங்களையும் 3245 பாடல்களையும் உடையது.

## பதிப்பு வரலாறு




17.10.1897 அன்று தி.அ.முத்துசாமிக் கோனார் தாம் நடத்திய விவேக திவாகரன் என்னும் மாத இதழில் ''தக்கை ராமாயணம் என்பது ஓர் அரிய நூல். இதை ஆக்குவித்தோன் மோரூர் நல்லதம்பிக் காங்கேயன் என்று தெரிகிறது. ஆக்கியோன் பெயர் முதலியன தெரிய வில்லை. தயவு செய்து யாரேனும் அறிவித்தால் ரூபாய் 10 பரிசு கொடுக்கப்படும்'' என்று அறிவித்திருந்தார். 1925ஆம் ஆண்டு கோனார் தக்கை ராமாயணத்தைப் பதிப்பிக்கத் தொடங்கினார் என்று அவர் நடத்திய கொங்கு மண்டலம் இதழ் மூலம் தெரிகிறது. 5.1.1933 அன்று கோனார் அவர்கள் தக்கை ராமாயணம்

என்ற தலைப்பில் ''கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரிலிருந்து எழுகரை நாட்டை ஆண்டவனும், திருச்செங்கோடு ஸ்ரீ அர்த்தனாரீசுவரர் ஆலயத் திருப்பணியை முடித்துப் பூசைகள் சிறப்புற நடக்குமாறு புரிந்தவனுமாகிய நல்ல தம்பிக் காங்கேயனால் கேட்டுக் கொள்ளப் பட்டு எம்பெருமான் கவிராய ரென்னும் அரிய பெரிய வித்துவானால் தக்கை என்னும் இசைத் தமிழால் இன்றைக்கு 334 வருஷங்களுக்கு முன் பாடப்பட்டது. தக்கை என்னும் இசைத்தமிழ்ப் பாட்டானதால் தக்கை ராமாயணம் எனப் பெயராயிற்று. கொங்கு நாட்டினரால் கேட்கப் பட்டதும் கொங்கு நாட்டினரால் பாடப்பட்டதுமான கவியாதலால் இதையும் அச்சிட வேண்டும். இதன் விலை ரூபாய் 2.8.0 தான்'' என்று எழுதியுள்ளார். 1934இல் கோனார் அவர்களின் கண்பார்வை முழுவதும் போய் விட்டதால் இப்பணி முற்றுப் பெறவில்லை.



கொங்கு நாட்டுப் பெரும் புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் சில தக்கை ராமாயண ஏட்டுச் சுவடிகள் பெற்றார். இன்னும் சில சுவடிகள் கிடைக்கும் என்று தேடினார். முழு ஏட்டுச் சுவடியையும் பெயர்த்தெழுதி அச்சிடும் முயற்சி பற்றி 1964, 1968ஆம் ஆண்டு விளம்பரத்தின் மூலம் அறிவித்தார்.

புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கட்குக் கோனார் அச்சிட்ட சில படிவங்களும் கிடைத்தன. ஆனாலும் தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்களும் அப்பணியை முடிக்க இயலவில்லை.



புலவர் தெய்வசிகாமணிக் கவுண்டர் தேடிய தக்கை ராமாயண ஏட்டுச் சுவடிகள், கையெழுத்துப் பிரதி, கோனாரின் சில அச்சுப் படிவங்கள் அனைத்தும் அவர் மறைவிற்குப் பின் பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. அவை அனைத்தையும் தவத்திரு சாந்தலிங்கராமசாமி அடிகளாரிடம் பெற்ற பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர்

தமிழ்நாடுஅரசு தொல் பொருள் ஆய்வுத்துறை மூலம் யுத்தகாண்டம் தவிர மற்ற ஐந்து காண்டங்களையும் இரண்டு தொகுதிகளாக 1983ஆம் ஆண்டு வெளியிட்டார். பேராசிரியர் மு. அருணாசலக் கவுண்டர் ஏடு பெயர்த்து எழுதியதாகக் கூறியுள்ளார். அப்பணியை புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டரே முடித்திருந்தார். யுத்த காண்டம் இன்னும் அச்சாகவில்லை. 1897ல் தொடங்கிய பணி 1983ல் முற்றுப் பெற்றது. அதுவும் ஓரளவே.

கொங்கு நாட்டுக்குப் பெருமை சேர்க்கும் இந்நூல் முழுமையாக வெளிவருவது கொங்கு நாட்டுக்குப் பெருமை தரும். கொங்கு மண்டலக் கம்பன் கழகங்கள் இணைந்து வெளியிடலாம்.

கம்பர் தன்னை ஆதரித்த சடையப்பவள்ளல் பெயரைப் பல இடங்களில் நன்றியுடன் குறிப்பிடுவது போல எம்பெருமான் கவிராயரும் மோரூரையும், அதன் தலைவராகிய நல்லதம்பிக் காங்கேயரையும் பல இடங்களில் நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.

1) இனத்தில் பெரியவன் மோரூரான்
இந்த்ர திருஅர்த்த நாரிக்கண்ணன்
கணத்திற் குமணன் ஆகவராமன்
கருணை நல்லதம்பிக் காங்கேயன்

மனத்திற் குடிகொண்ட ராமபிரான்
மகிழக் கவுசிக மாமுனிவன்
தினத்திற் புறத்தேவல் அடிமைசெயும்
தெய்வப் படைக்கலம் சேரத்தந்தான். (பா.வெ. (1)

2) நல்லதம்பிக் காங்கேயனின் சேனைகளைப் பற்றி எம்பெருமான் கூறும் கூற்று

ஆனை பரிதேரும் நவநிதியும்
அரமங் கையர்களும் அமுதமுற்றும்
ஏனை முழுவதும்தன் கடலிற்செல்ல
இமையோர் இரிந்தார்என் போல்என்றால்
மான பரன்கண்ணன் மோரூரான்
வரிசை நல்லதம்பிக் காங்கேயன்

சேனை வரக்கண்டு கலங்கிஒன்னார்

சேனை திசைஎங்கும் சிதறுகைபோல். (பா.ச.மு.6)

3) மிதிலைக் காட்சிப் படலத்தில் சந்திரோதயத்தின் நிலவொளி யானது நல்லதம்பிக் காங்கேயனின் கீர்த்திபோல் எங்கும் பரவி இருந்தது என்று பாடுகின்றார்.

சுமுகன் மோரூர்வாழ் அத்தப்பன்சொல்

தோன்றல் நல்லதம்பி கீர்த்தி எங்கும்

சமுகம் பலரும் கொண்டாடும் வண்ணம்

தண்ணிலா எங்கும் தழைத்ததம்மா.

4) யுத்த காண்டத்தில் சேதுபந்தனப் படலத்தில் வானரங்கள் பெயர்த்து வீசிய மலைகளை நளன் தாங்கிக் கொண்டது மோரூரில் நல்லதம்பிக் காங்கேயன் தன்னை வந்து அடைந்தோரை அஞ்சாதே என்று கூறுவதைப் போல இருந்தது எனப் பாடுகின்றார்.

.... .... .... .... நளன் என்னும் பேர்

நெடுவானர தச்சன் நீள்பொற்கையால்

முனைவன் புகழ்அத்த நாரிக்கண்ணன்

மோரூர் வாழ்கின்ற நல்லதம்பி

தனைவந்து அடைந்தோரை அஞ்சல் என்று

தாங்கும் திறம்போலத் தாங்கிக் கொண்டான். (சே.8)

5) நாக பாசப் படலத்தில் இலக்குவன் முதலியோரைப் பிடித்திருந்த நாகாத்திரம் கருடன் வருகையால் இருந்த இடம் தெரியாமல் அழிந்ததை எம்பெருமான் நல்லதம்பிக் காங்கேயனுடைய மோரூருக்குச் சென்றால் நித்தம் யாவருடைய பசியும் பறந்து போன தைப் போல் இருந்ததெனப் பாடுகின்றார்.

....... ...... ...... சேரும் பெருநாக பாசம் எல்லாம்

அர்த்தநாரி சொல் நல்லதம்பி

ஆகவராமன் மோரூரை உற்றால்

நித்தம் யாவர்க்கும் பசி பாசம்

நீங்கும் படிபோல் நீங்கியதே. (நா. 125)

6) இராமன், சீதை, இலக்குவன் மூவரும் அகத்தியர் ஆசிரமத்தில் தங்கி இருந்தபொழுது ராமனுக்கு அகத்தியர் சிவனார் வில்லைக் கொடுக்க ராமன் அதைப் பெற்றுக் கொண்டான். இதை எம்பெருமான் நல்லதம்பி பாண்டியனிடம் வரிசைகள் பலவும் மூன்று விருதுகளாகிய தேரும், மாலையும், கொடியும் பெற்றதுபோல என்று பாடுகின்றார். இங்கே பாண்டியனிடம் விருது பெற்றது சூரிய காங்கேயன் ஆகும். தன்குல முன்னோர்கள் பெற்ற விருதுகளைப் பின்னே வந்தவர்களுக்கு ஏற்றிப் பாடுவது இலக்கிய மரபாகும்.

மிகத்திருவன் செங்கோட்டில்
வேலவன்பேர் நாரணன்பேர்
செகத்துமன்னர் தருசிறப்பும்
தென்னவன்பால் மூவிருதும்
மகத்துகன்மால் நல்லதம்பி
வரிசைபெற்றான் மோரூரான்
அகத்தியன்பால் ராமபிரான்
அருள்வரிசை பெற்றனனே.

7) ஆரணிய காண்டம் கரன் வதையில் இராமபிரான் வில் அறுபட்டு வெறுங்கையாய் நின்றபொழுது கையைப்பின்னே நீட்டவும் முன்னே தன்னிடம் கொடுத்து வைத்திருந்த பரசுராமன் வில்லை வருணன் தந்து உதவியதை எம்பெருமான் நல்லதம்பியும் அவனுடைய குலத்தாரும் ஏற்றகை மாற்றாமல் கொடுப்பது போலத்தான் என்று பாடுகின்றார்.

தருண மறையவர் தமிழ்ப்புலவர்
தக்கோர் மிக்கவர் சகலர்க்கெல்லாம்
அருண முகில்போல உதவுங்கண்ணன்
அர்த்த நாரிசொல் மோரூரான்
கருணை நல்லதம்பிக் குலத்தார்போல்
களத்தில் ஏற்றகை மாற்றாமல்
வருணன் உதவினன் மாயோற்கு
மழுவல்லோன் பண்டு கொடுத்தவில்லை. (கர.வ.44)

8) கிட்கிந்தா காண்டம் அரசியற்படலத்தில் ராமபிரான் கட்டளைப்படி சுக்கிரீவனுக்கு இலக்குவன் முடிசூட்டியதை எம்பெருமான் பாண்டியனுக்கு நல்லதம்பி முடிசூட்டியதைப் போன்றுதான் என்று பாடுகின்றார்.

உரமன் எழுகரை நாடன்கண்ணன்
உபயகுல சுத்தன் வேளாளன்
திரமன் புகழ்மோரூர் அத்தப்பன்சொல்
செஞ்சொல் நல்லதம்பிக் காங்கேயன்
வரமன் புவிஆளத் தென்னவர்க்கு
மகுடம் சூட்டுகைக்கு உவமைசொல்ல
பரமன் திருமுன்னே பரதன்பின்னோன்
பருதி புதல்வருக்கு மவுலிவைத்தான். (அரசி. 2)

9) சீதையைத் தேடித் தென்திசை சென்ற அனுமன் வேங்கடம், தொண்டை மண்டலம், சோழநாடு முதலியவற்றில் தேடிவிட்டுப் பின் கொங்கில் ஏழ்கரை நாட்டில் உள்ள மலைகளில் தேடினான் என்று கூறித் தன் நாட்டைப் பற்றியும் தன்னை ஆதரித்த வள்ளலையும் பின்வருமாறு பாடுகின்றார்.

கூர்ந்த கொங்குஏழ் கரைநாட்டில்
கொல்லிமலை சேரன்மலை
சேர்ந்த கஞ்சமலை அலைவாய்
திருவாரை செங்கோடு
வார்ந்த சங்ககிரி பாலை
மலைவேத கிரிமுதலாய்
ஆர்ந்தன காவேரி நன்னீர்
ஆடி மின்னைத் தேடினரே. (தக்.கிட். ஆற். 14)

10) காவிரியின் மேல்கரையும் கீழ்க்கரையுமாய் விளங்கும் பூந்துறை நாடெங்கும் சீதையை அனுமனும் மற்றையோரும் தேடினர் என்று பாடுகின்றார்.

சேல்கயல் பாய்வயல் மோரூர்
திருமலை அத்தப்பன் அன்பாம்
பால்கனி போல் நல்லதம்பி
படைத்த கொங்கு மண்டலந்தான்
மால்கவி ராமாயணம் போல்
வடகலை போல் தென்கலை போல்
மேல்கரையும் கீழ்க்கரையும்
விளங்க எங்கும் நாடினரே. (தக்.கிட்.ஆற்.15)

11) தென்திசையில் மேலும் சீதையைத் தேடிச் செல்லுகையில் பாலைவனப் பகுதியில் ஒரு நகரம் தென்பட்டது. அது மாடமாளிகைகளுடன் மோரூரைப் போன்று இருந்தது என்றும், நல்லதம்பியிடம் பரிசில் பெற்ற புலவர்கள் மனைகள்போல் எங்கும் பொற்குவியல் ஆடை ஆபரணங்கள் இனிய கனி வகைகள், அறுசுவை உண்டிகள், சந்தனம் மற்றும் பூமாலைகளும் நிறைந்திருந்தன என்றும் கூறுகின்றார்.

விரையப் போந்து அங்கோர் நகரங்கண்டார்
வேதன் உலகம்போல் மிகவிளங்கி
நிரைகற் பகச்சோலை கமலப் பொய்கை
நெடுங்கோபுர கூடம் மாடம்எங்கும்
வரைமற் புயன்மோரூர் நல்லதம்பியை
வாழ்த்தும் புலவோர்தம் மனைச்செல்வம்போல்
கரைஅற் றனசொன்னம் கனிபூதேன்
களபம் துகில்ஆரம் பலவும் கண்டார். (பி.நீ.8)

12) சுந்தர காண்டத்தில் உருக்காட்டுப் படலத்தில் அனுமன் சீதைக்குத் தன்னுடைய பேருருவைக் காட்டி நல்லதம்பியின் புகழ்போல் ஓங்கி வளர்ந்து நின்றான் என்று பாடுகின்றார்.

மேரு தனில்மிக்க தாருதன்னில்
மின்மினித் திரள்போல் பயிர்கள்எங்கும்
நேருற்றே நட்சத் திரங்கள்சுற்ற
நிலவுக்கு உயர்குண்ட லங்கள்மின்ன

காருக்கு இணையாம் ஆகவராமன்
கண்ண குலன் அர்த்த நாரிமைந்தன்
சீருத்தமன் மோரூர் நல்லதம்பிதன்
சிறந்தபுகழ்போல் வளர்ந்து நின்றான். (உருக். 40)

13) யுத்த காண்டத்தில் இராமனுடைய பிரிவால் வருந்தி இருந்த அயோத்தி மக்கள் நந்திக் கிராமம் சென்று இராமபிரானைக் கண்டு செய்த ஆரவாரமானது நல்லதம்பி காதையை முற்றும் பாடுவித்த புகழ் போலத் திசைஎங்கும் உள்ளவர்களின் செவிகளை எட்டியதென்று பாடுகின்றார் எம்பெருமான்.

வராமல் மெலிவுற்ற நகரிசனம்
வரதன் வரக்கண்டு மகிழ்ந்துநந்திக்
கிராமந் தனிலுற்று அனைவருடன்
கெழுமி ஆர்க்கின்ற கிளர்ஓசை
அராமன் அருள்பெற்ற மோரூரான்
அர்த்தநாரி சொல் நல்லதம்பி
இராமகதை முற்றும் பாடுவித்த
இசைபோல் உலகெங்கும் செவிக் கொண்டதே.
(திருவடி 22)

**எதிர்நூல்**



கம்பருக்குச் சார்பு நூலாக தக்கை ராமாயணம் தோன்றியது போலக் கொங்கு நாட்டில் எதிர்நூல் ஒன்றும் தோன்றியது. இந்நூல் தோன்றுவதற்கும் கம்பராமாயணமே காரணம்.

அறச்சலூர் ஓலவலசில் முத்துசாமிக் கவுண்டர் - சின்னம்மையார் தம்பதியினருக்கு 1.7.1906 அன்று பிறந்தவர் குழந்தை. 10 வயது இருக்கும்போதே காதில்கேட்ட சந்தம் போலப் பாடல் இயற்றத் தொடங்கியவர். 39 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். பல நூல் ஆசிரியர்.

பெரியார் தொண்டர். திராவிட இயக்கப் பற்றின் காரணமாக 1946இல் இராவணனைப் பாட்டுடைத் தலைவராக வைத்து 'இராவண காவியம்' பாடினார். 5 காண்டங்களையும் 57 படலங்களையும் 3100 பாடல்களையும் உடையது. சூர்ப்பனகையை காமவல்லி என அழகிய பெண்ணாக ஆக்கினார். மண்டோதரியை வண்டார் குழலி என்றார். இராம சகோதரர்கள் செய்த செயல்களுக்காகப் போர் முறைப்படி சீதையை இராவணன் சிறையெடுத்ததாகக் கூறுகிறார்.

இராவணன் பெருமையை சீதை வாயிலாகவே அனுமனிடம் கூறுமாறு பாடியுள்ளார். செய்த தவறுக்கு மன்னிப்புக் கேட்டால் சீதையை விட்டுவிடுவதாக இராவணன் கூறுகின்றான். படிப்போர் உள்ளம் களிக்குமாறு சுவையான கவிதைகள் அடங்கிய நூல்.

இராவணன் கடற்கரைக்கு வருகிறான். கடல்கோளால் தமிழ் இலக்கியங்களை அழித்ததற்காகத் தன்னைத் தண்டிக்க வருகிறான் என்று எண்ணி சங்க நூல்கட்குப் பதிலாகச் சங்குகள் கொடுத்த வெண் முத்துக்களை ஆயிரம் மடங்கு இராவணன் கால்களில் காணிக்கையாகக் கடல் கொட்டுவதாகப் பாடியுள்ளார்.

''சங்கம்தரு தமிழ்உண்டது தவறென்று தெளிந்தேன்
இங்கொன்றிய அரசேஇனி என்றும்தலை வையேன்
அங்கன்றது கொண்டேபொறுத் தருள்கென்று ஒலிகடலும்
சங்கம்தரு முத்தம்திறை தரும்ஆயிரம் மடங்கே''

என்பது அதைக் குறிக்கும் பாடல்.

கம்பன் மீது பற்றுக் கொண்ட பேரறிஞர்களையும் கவர்ந்தது இந்நூல்.

''கம்பனில் கட்டுண்டு கிடந்தேன்
அந்தக் கட்டை இராவணகாவியம் அவிழ்த்து விட்டது.''

-இரா.பி. சேதுப்பிள்ளை

''இனியொரு கம்பன் வருவானா?
இப்படியும் கவிதை தருவானா?
கம்பனே வந்தான் கவிதையும் தந்தான்
கருத்து மட்டுமே வேறு''

- ஐயன்பெருமாள் கோனார்.

இராவண காவியம் 2.6.1948 அன்று தடைசெய்யப்பட்டது. 1971இல் தடை நீங்கி இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. 25.9.1972இல் குழந்தை மறைவிற்குப் பின் 1994இல் மூன்றாம் பதிப்பு வெளிவந்தது.

# 1. கம்பராமாயணப் பதிப்புகள்

1842 பிரகலாதன் சரித்திரம் என்கிற நரசிங்க விஜயம்
(கம்பராமாயணம்-யுத்தகாண்டம் இரணியவதைப் படலம்)

1843 கம்பராமாயணம் - பால காண்டம்
மூலம். (முதல் அச்சுப்பதிப்பு) -
(ப.ஆ.) வேங்கடாசல முதலியார்

1844 ஸ்ரீமத் கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
(ப.ஆ.) வேங்கடாசல முதலியார்,
சேமங்கலம் நாராயணசாமி முதலியார்

1845 பாலகாண்டம் - மூலம்
மழவை மகாலிங்கையர்

1857, 58 ஸ்ரீமத் கம்பராமாயணம் - பால காண்டம்
(ப.ஆ.) வித்துவான் சுப்பராய முதலியார்,
வித்துவான் சுப்பராய பிள்ளை

1859 ஸ்ரீமத் கம்பராமாயணம் - சுந்தர காண்டம்
(ப.ஆ.) இராசகோபாலப்பிள்ளை

1861 கம்பராமாயணம் - பாலகாண்டத்திற்கு உரைபாடம்
(ப.ஆ.) எஸ்.கிருஷ்ணசாமி முதலியார்

1862 ஸ்ரீமத் கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
(ப.ஆ) கோ.இராசகோபாலப் பிள்ளை

1863 ஆரணியகாண்டம்
(ப.ஆ.) புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

1863 ஸ்ரீமத் கம்பராமாயணம் - யுத்த காண்டம்
(ப.ஆ.) கோவிந்தபிள்ளை, புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

1864 ஸ்ரீமத் கம்பராமாயணம் - பாலகாண்டம்
(ப.ஆ.) புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

1864 ஸ்ரீமத் கம்பராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம்
(ப.ஆ.) கோவிந்த பிள்ளை, புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

1864 ஸ்ரீமத் கம்பராமாயணம் - சுந்தர காண்டம்
(ப.ஆ.) கோவிந்தபிள்ளை, புங்கத்தூர் கந்தசாமி முதலியார்

1870 கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
(ப.ஆ.) இராசகோபால பிள்ளை

1870 ஸ்ரீமத் கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
(ப.ஆ.) சேமங்கலம் நாராயணசாமி முதலியார்

1871 ஸ்ரீமத் கம்பராமாயணம் - சுந்தர காண்டம் (மூலமும் உரையும்)
(ப.ஆ) ஏழுமலைப்பிள்ளை, வி.கோவிந்தபிள்ளை உரை

1878 கம்பராமாயணம் - பாலகாண்டம்
(ப.ஆ) சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தகச் சங்கம்.

1883 கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
கி.க.அ. சங்கத்தாரது அச்சுக்கூடம்

1884 கம்பராமாயணம் - சுந்தர காண்டம், மூலம்
தேவராச கவிராயர்

1885 யுத்தகாண்டம் - உத்தரகாண்டம் மூலம்
தேவராச கவிராயர்

1885 கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
(ப.ஆ.) சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தகச் சங்கம்

1885-86 பாலகாண்டம் - சுந்தரகாண்டம் (மூலம்)
சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்

1886 கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(ப.ஆ.) சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தகச் சங்கம்

1887 யுத்தகாண்டம், உத்தரகாண்டம் (மூலம்)
சாத்தம்பாக்கம் கிருஷ்ணசாமி முதலியார்

1888 கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
(ப.ஆ) சென்னை ராஜதானிப் பாடசாலைப் புத்தகச் சங்கம்.

1889 ஸ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் (மூலமும், உரையும்)
(ப.ஆ.) சேஷசாஸ்திர உரை

1900 ஸ்ரீமத் கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
(ப.ஆ.) எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர்
எஸ். வெங்கடராயலு நாயுடு உரை

1902 கம்பராமாயணம் - பாலகாண்டம்
(ப.ஆ.)க.வ.திருவேங்கட நாயுடு, மு.சண்முகமுதலியார்

1904,1915, ஸ்ரீ ராமாயண - பாலகாண்டம் (மூலமும், உரையும்)
1922 இராமசாமிநாயுடு உரை
(ப.ஆ.) குப்புசாமி நாயுடு

1904 அயோத்தியா காண்டம் (உரையுடன்)
தக்கோலம் ராமசாமி நாயுடு உரை
சோடசாவதானம் சுப்பராய செட்டியார்

1904 ஸ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(மூலமும், உரையும்)
தி.க.சோடசாவதானம் சுப்பராய செட்டியார் உரை,
(ப.ஆ) தக்கோலம் இராமசாமி நாயுடு

1905 ஆரணிய காண்டம் உரையுடன்
எம்.ஆர்.கந்தசாமிக் கவிராயர், உடுமலைப்பேட்டை.

1907 ஸ்ரீமத் கம்பராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம்
(மூலமும், உரையும்)
(ப.ஆ) என்.பொன்னம்பலப் பிள்ளை உரை

1907 கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்
(ப.ஆ) பி.ஆர்.கிருஷ்ணமாசாரியார்

1911 ஸ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(ப.ஆ.) அ.சுந்தரநாத பிள்ளை

1914 கம்பராமாயணம்
(ப.ஆ.)?
அ.இராமசாமி முதலியார் & சன்ஸ்

1914-1928 ஸ்ரீமத் கம்பராமாயணம்
(ப.ஆ.) தி.சி.பார்த்தசாரதி அய்யங்கார்

1918 இராமாயணம் -பாலகாண்டம்
குமாரசுவாமிப்பிள்ளை & கனகசுந்தரம் பிள்ளை உரை

1920 கம்பராமாயணம் -பாலகாண்டம் (சுருக்கம்)
ராமசாமிநாயுடு சன்ஸ்

1922 பாலகாண்டம் - உரையுடன் (ஸ்ரீநிவாச முதலியார் உரை)
(ப.ஆ.) இராமசாமிநாயுடு

1922 கம்பராமாயணம் - கிஷ்கிந்தா காண்டம்
வை.மு.சடகோப ராமானுஜாசாரியார்
சே.கிருஷ்ணமாச்சாரியார்
வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரை

1924 பாலகாண்டம்
(ப.ஆ.) நமசிவாய முதலியார்

1925 ஸ்ரீமத் கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்
நமசிவாய முதலியார்

1926 கம்பராமாயணச் சுருக்கம் - அயோத்தியா காண்டம்
ராமசாமிநாயுடு சன்ஸ்

1926 கம்பராமாயணச் சுருக்கம் - ஆரணிய காண்டம்
சி.குமாரசாமிநாயுடு சன்ஸ்

1926 பாலகாண்டம் - யுத்தகாண்டம் (மூலம்)
ப.ஆ. - க. இராமரத்ன ஐயர்

1926 ஸ்ரீகம்பராமாயணம் - பாலகாண்டம்
வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்பெனி

1928 பாலகாண்டம் - சுந்தரகாண்டம் (மூலம்)
யுத்த - உத்தரகாண்டங்கள் (மூலம்)
டி.ஸி. பார்த்தசாரதி ஐயங்கார்

1928 ஸ்ரீகம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
வை.மு.கோ. உரையுடன்

1929 பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை (உரையுடன்)
வித்வான் ராமசாமி நாயுடு

1932 ஸ்ரீகம்பராமாயணம் - யுத்தகாண்டம் - 2
வை.மு.கோ. உரையுடன்

1936, கம்பராமாயண சாரம் (தொகுதி-1) பால அயோத்தியா

1953 காண்டங்கள்

வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

(ப.ஆ.) கு. அருணாசலக்கவுண்டர்

1936, 1955 கம்பராமாயண சாரம் (தொகுதி-2) ஆரணிய, கிட்கிந்தா காண்டங்கள்

வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

(ப.ஆ.) கு. அருணாசலக்கவுண்டர்

1937 கம்பராமாயணம் - பாலகாண்டம் (ஆழ்வார் திருநகரி பிரதிகளின்படி)

(முதல் ஏழு படலங்கள்)

(ப.ஆ.) வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார்

1939 கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்

வை.மு.சடகோப ராமாநுஜாசாரியார்

சே.கிருஷ்ணமாச்சாரியார்

வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரை

1942 கம்பராமாயணம் -பாலகாண்டம் (ஆழ்வார் திருநகரி பிரதிகளின்படி)

(ப.ஆ.) வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார்

1944 கம்பராமாயணம் - திருவயோத்தியா காண்டம் (ஆழ்வார் திருநகரி பிரதிகளின்படி)

ரி.பக்ஷி ராஜையங்கார்

1944 கம்பராமாயணம் -பாலகாண்டம் (ஆழ்வார் திருநகரி பிரதிகளின்படி)

(ப.ஆ.) பெரியன் வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார்

1946 ஸ்ரீமத் கம்பராமாயணம் -பாலகாண்டம் (திருவவதாரப் படலம் முடிய)

எஸ். கலியாண சுந்தர ஐயர்

1948 கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்

(ப.ஆ.) பெரியன் வெ.நா.ஸ்ரீநிவாஸையங்கார்

1949 கம்பராமாயணம் பாலகாண்டம்
எஸ்.கலியாணசுந்தர ஐயர்

1951 ஸ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்
(ப.ஆ.) ஸ்ரீமதி ருக்மணி தேவி

1953 இராமகாதை - பாலகாண்டம் (சுருக்கம்)
சொ.முருகப்பன்

1953 கம்பராமாயணசாரம் (மூன்றாம் பகுதி)
யுத்த காண்டம்,
வெ.ப.சுப்பிரமணிய முதலியார்
(ப.ஆ.)கு.அருணாசலக்கவுண்டர்

1953- கம்பர் தரும் ராமாயணம்
1955 (ப.ஆ.) டி.கே.சிதம்பரனார்
முதல் பகுதி : பால, அயோத்தியா காண்டங்கள்
(அரும்பதவுரை)
இரண்டாம் பகுதி : ஆரணிய, கிட்கிந்தா காண்டங்கள்
(பதவுரை)
மூன்றாம் பகுதி : சுந்தர, யுத்த காண்டங்கள்

1955 - கம்பராமாயணம் - சுந்தரகாண்டம்
1956 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1956 இராம காதை - அயோத்தியா காண்டம்
சொ.முருகப்பன்

1956 கும்பகர்ணன் வதைப்படலம் (1-170)
சி.ஆறுமுகம், நா.சிவபாத சுந்தரன் உரை

1956 உயுத்த காண்டம் - கும்ப கருணன் வதைப்படலம் (1.171)
பாடல்கள்
இ.நமசிவாயதேசிகர், வ.நடராஜன் உரை (பக். 10+157)

1956 கும்பகர்ணன் வதைப்படலம்
செ.ரெ.இராமசாமிப்பிள்ளை உரை

1958 கம்பராமாயணம் (பால, அயோத்தியா காண்டம்)
கு. அழகிரிசாமி

1957 - கம்பராமாயணம் - பாலகாண்டம்
1958 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1958 - கம்பராமாயணம் (இராமாவதாரம்)
1959 எஸ்.ராஜம், தம்புசெட்டித் தெரு, சென்னை.

1958 - பாலகாண்டம்
1958 - அயோத்தியா காண்டம்
1958 - ஆரணிய காண்டம்
1958 - கிட்கிந்தா காண்டம்
1958 - சுந்தர காண்டம்
1959 - யுத்த காண்டம்

1959 - கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் 1, 2
1960 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1959 ஸ்ரீமத் கம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
உ.வே.சா.நூல் நிலையம்

1961 ஸ்ரீமத் கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
உ.வே.சா.நூல் நிலையம்

1962 ஸ்ரீமத் கம்பராமாயணம் - யுத்த காண்டம் - 1
உ.வே.சா.நூல் நிலையம்

1962 ஸ்ரீமத் கம்பராமாயணம் - யுத்த காண்டம் - 2
உ.வே.சா.நூல் நிலையம்

1962 கம்பராமாயணம் (தொகுப்பு)
சாமி. சிதம்பரனார்

1963 கம்பர் கவியும் கருத்தும் (சுருக்கம்)
பி.ஜி.கருத்திருமன்

1963 ஸ்ரீமத் கம்பராமாயணம் - யுத்த காண்டம் - 3, 4
உ.வே.சா.நூல் நிலையம்

1963- கம்பராமாயணம் - ஆரணிய காண்டம் - 1, 2
1964 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1965 கம்பராமாயணம் - சுந்தர காண்டம்
கு.அழகிரிசாமி

1965- கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம் 1, 2
1967 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1967 ஸ்ரீமத் கம்பராமாயணம் பாலகாண்டம்
உ.வே.சா.நூல் நிலையம்

1967 ஸ்ரீ கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
வை.மு.கோ.உரையுடன்

1968, 1969 கம்பராமாயணம் - யுத்த காண்டம் 1, 2, 3
1970 அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1969 கம்பராமாயண சாரம் - ஆரணிய காண்டம்
வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

1969 கம்பராமாயண சாரம் - சுந்தர காண்டம் (சுருக்கம்)
வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

1969 கம்பராமாயண சாரம் - அயோத்தியா காண்டம்
வெ.ப.சுப்பிரமணிய முதலியார்

1970 ஸ்ரீகம்பராமாயணம் - ஆரணிய காண்டம்
வை.மு.கோ.உரையுடன், சென்னை.

1970 ஸ்ரீ கம்பராமாயணம் - சுந்தர காண்டம்
வை.மு.கோ. உரையுடன்

1970 ஸ்ரீ கம்பராமாயணம் - யுத்த காண்டம் - 1

1970 கம்பராமாயணம் - யுத்தகாண்டம் 4, 5, 6
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

1972 ஸ்ரீமத் கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம் 1, 2
உ.வே.சா.நூல் நிலையம்

1973 கம்பன் காவிய சாரம் (பாலகாண்டம்)
எஸ். நல்லபெருமாள்

1974 கம்பர் - 1000 (சுருக்கம்)
அ.கு.ஆதித்தர்

1976 கம்பராமாயணம் (இராமாவதாரம்)
கம்பன் கழகம், சென்னை.

1977 கம்பர் காவிய சாரம் (அயோத்தியா காண்டம்)
எஸ்.நல்லபெருமாள்

1994 கம்பராமாயணம் பாலகாண்டம் - யுத்த காண்டம்
(8 தொகுதிகள்) உரையுடன்
(ப.ஆ.) அ.ச.ஞானசம்பந்தன்,
கோவை கம்பன் கழகம், கோவை.

கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
முனுசாமி முதலியார்

ஸ்ரீமத் கம்பராமாயணம் - கிட்கிந்தா காண்டம்
சி.த.முத்தையா பிள்ளை

கம்பராமாயணம் (சுருக்கம்) பாலகாண்டம்
(ப.ஆ.) வ.வே.சு.ஐயர்

சீதா கல்யாணம் (தொகுப்பு)
தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்.

ஸ்ரீமத் கம்பராமாயண அருங்கவி (1033 பாக்கள்)
அருங்கவி விளக்கம்
கபித்தலம் துரைசாமி மூப்பனார்

நன்றி : முனைவர் **அ.அ.மணவாளன்**

குறிப்பு : கம்பர் இயற்றிய மங்கல வாழ்த்து, கம்பர் வாழி, ஏரெழுபது, திருக்கை வழக்கம் நான்கும் அடங்கிய நூல் ஈரோடு கொங்கு ஆய்வு மையத்தில் கிடைக்கும்.

# 2. இராமாயணத்தோடு தொடர்புடைய இலக்கியச் சுவடிகள்

அனுமந்த வாசகம் (உரைநடை)

இராமாயணம் - அங்கதன் தூது

இராமாயண அவசர விருத்தம் - சீர்காழி அருணாசலக்கவிராயர்

இராமாயண உபன்யாசம்

இராமாயண ஓடம்

இராமாயண கதா சங்கிருகம்

இராம கதை (உரைநடை)

இராம கதை (செய்யுள், உரைநடை)

இராமாயணக் கதை

இராமதாரக் கதை

இராமாயணக் கருப்பொருள்

இராமாயணக் கும்மி

இராமாயணக் குறிப்புரை (உரைநடை)

இராம சரிதத்திரட்டு

இராமாயணத் தனிச்சுலோகி - பெரியவாச்சான் பிள்ளை (உரைநடை)

இராமாயணத் திரட்டு

இராமசெயத் திருப்புகழ் - பாலபாரதி இராமய்யங்கார்

இராம நாடகக் கீர்த்தனை

இராமாயண பட்டாபிஷேக வியாக்கியானம்

இராமாயண பரதம்

இராமாயணப் பாடல்கள்

இராமவாசகம்

இராமாயண விடுபாடல்கள்

இராமாயண வியாக்யானம்

இராமாயண விருத்தம்

இராமாயண வெண்பா - இராமானுசையங்கார்

குசலவன் கதை - வினை தீர்த்தான், திம்மய்யன்

குயில் ராமாயணம்

சதமுக ராமாயணம்

சீதா வனவாச காண்டம்

வீடணன் அடைக்கலம்

வீடணன் அறிவுரை - திருவழுந்தூரான்

வீடணன் புத்தி - திருவழுந்தூரான்

ஸ்ரீராம சரித்திரம்

கம்ப ராமாயண வசனம் - சீனிவாசன்

இராமாயணச் சிந்து - திருக்குருகூர் வைகுண்டன்

# 3. ஏக விருத்த இராமாயணம்

எண்சீர், அறுசீர் விருத்தப் பாடல்களில் வகைக்கு ஒன்றாக இங்கு அளிக்கப்படுகிறது.

### எண்சீர் விருத்தம்

தாதையார் சொலராமன் காடு போதல்
சார்ந்துளபொன் மானெனும்மா ரீசன் சாதல்
சீதையார் பிரிவுஎருவை மரணம் பானு
சேயொடுநட் புக்கோடல் வாலி வீடல்
ஓதநீர்க் கடல்பரப்பை அனுமன் தாண்டல்
உயர்இலங்கை நகர்எரியால் வேவக் காண்டல்
பாதகராம் அரக்கரெலாம் இறக்கத் தாக்கல்
பாக்கியரா மாயணச்சீர்க் காதை ஈதே!

### அறுசீர் விருத்தம்

பராவரும் இராமன் மாதோடு
இளவல்பின் படரக் கான்போய்
விராதனைக் கரனை மானை
கவந்தனை வென்றி கொண்டு
மராமரம் வாலி மார்பு
துளைத்துஅணை வகுத்துப் பின்னர்
இராவணன் குலமும் பொன்ற
எய்துஉடன் அயோத்தி வந்தான்.

# 4. கடல் கடந்த கம்பர்

இராமர் கடல் கடந்தார். இராமர் புகழ்பாடும் இராமாயண ஓலைச்சுவடிகளும் கடல் கடந்துள்ளன. இராமாயணம் தொடர்பான ஏட்டுச் சுவடிகள் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள்.


1. போடிலியன் நூலகம் - ஆக்ஸ்போர்டு.
2. பிரிட்டிஷ் அருங்காட்சியகம் - லண்டன்.
3. ராயல் நூலகம், கோபன் ஹேகன் - டென்மார்க்.
4. கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகம் - கேம்ப்பிரிட்ஜ்.
5. எதினோகிராபிகல் அருங்காட்சியகம், ஸ்டாக்ஹோம் - ஸ்வீடன்
6. பிபிலோதேகு நேஷனல் - பாரிஸ், பிரான்சு.
7. லூதரன் மிஷன் சர்ச் அருங்காட்சியகம், லிப்சிக் - கிழக்கு ஜெர்மனி.



கம்பர் சிலை (சென்னை)




கம்பர் அஞ்சல் தலை



## கம்பன் மலரடி சென்னி வைப்பாம்

ஆதவன் புதல்வன் முத்தி
அறிவினை அளிக்கும் அண்ணல்
போதவன் இராம காதை
புகன்றருள் புனிதன் மண்மேல்
கோதவம் சிறிதும் இல்லான்
கொண்டல்மாறு அன்னை ஒப்பான்
மாதவன் கம்பன் செம்பொன்
மலரடி சென்னி வைப்பாம்.

– பழம்பாடல்